DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX Community

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1263
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday June 19, 2020

- உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 8,566,170 ஆக உயர்ந்தது...
- உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 455,521 ஆக அதிகரித்துள்ளது...
- இலங்கையில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை
- அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு. மொத்த இறப்பு 121,130 ஆக உயர்ந்துள்ளது...



கடந்த பல வாரங்களாக, உலக மக்கள் அனைவரையும் நடுங்கச் செய்யும் கொரோனா வைரஸ் நேற்று வியாழக்கிழமை 11ம் திகதி மாலை வரை பலிகொண்ட மக்களின் எண்ணிக்கை நாடுகள் வாரியாக தரப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| அமெரிக்கா: 121,130 | இத்தாலி: 34562 | கனடா: 8351 | இங்கிலாந்து: 42,410 | ஸ்பெயின்: 27,201 |
| ஜேர்மனி: 8960 | சீனா: 4659 | பிரான்ஸ்: 29,352 | ஈரான்: 9380 | இந்தியா: 12987 |
| இலங்கை: 11 | பெல்ஜியம்: 9579 | பிரேசில்: 48065 | ரஸ்யா:- 7850 | |

# கனடியப் பிரதமரின் தந்தையார் பியர் ட்ரூடோ அவர்களது சிலைக்கு கறுப்பு வர்ணம் தீட்டி பாதகம் செய்த இனவாதிகள்





தற்போதைய கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்களின் அன்புத் தந்தையும் கனடாவின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரும், கனடாவில் மனித உரிமைச் சாசனத்தையும் (Charter of Rights) பல்கலாச்சாரக் கொள்கையையும் பாராளுமன்றத்தில் சட்டமாக்கிய பெருமகனுமாகிய பியர் ட்ரூடோ அவர்களது உருவச் சிலை ஒன்றுக்கு இனவாதப் போக்குக் கொண்ட பாவிகள் சிலர் கறுப்பு வர்ணத்தை தீட்டி தங்கள் கறுப்பின எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள வோன் நகரத்தில் அமைந்துள்ள Pierre Elliott Trudeau Park என்னும் நகரசபைப் பூங்காவில் நிறுவப்பட்ட அவரது சிலையே இந்த அவமானச் செயலுக்கு உள்ளாகியது என்று யோர்க் பிராந்திய பொலிசார் அறிவித்துள்ளனர்.

மேற்படி யோர்க் பிராந்திய பொலிஸ் தலைமை அலுவலகம் பல்லின ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள இந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி பூங்கா அமைந்துள்ள பகுதிக்கு அருகில் வசித்து வரும் ஒரு அன்பர் தங்கள் தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசியில் அழைத்து மேற்படி முன்னாள் கனடிய பிரதமருடைய சிலை முன்னர் வெள்ளை நிறத்தில் இருந்ததாகவும். அந்தச் சிலைக்கு இனவாதிகள் சிலர் கறுப்பு நிறம் கொண்ட வர்ணத்தை தீட்டி அசிங்கப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX Realtron

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைவ வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

**உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..**

**குறைந்த வட்டி!..[2% முதல்]**

**நிறைந்த பெறுமதி!...**

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam

OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

4062 Ellesmere Rd, Scarborough, ON, M1C 1J2,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.uthayannews.ca

உதயன் கதிரோட்டம்

# மீண்டும் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கை கொண்டு ஆசனங்களுக்காக ஆட்களைத் தேடும் தேர்தல் தான் இது.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் வெற்றிகளை விட தோல்விகளையும் துயரங்களையும் தான் மக்கள் அதிகளவில் அனுபவித்துள்ளார்கள். தமது வாக்குகளை அளித்து எத்தனையோ ஆண்டுகளாக தங்கள் பிரதிநிதிகள் என்ற நம்பிக்கையில் தொடர்ச்சியாக பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தார்கள். ஆனால் தமிழ் மக்கள் தமது அரசியல்வாதிகளால் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவதை அவதானித்து இளைஞர்கள் தமது பிரதிநிதிகளிடம் கேள்விகளை முன்வைத்த போது அவர்களது கேள்விகயையும் அவர்களையும் புறக்கணித்து நடந்த தலைவர்கள் மீது கொண்ட வெறுப்புக் காரணமாகவே இளைஞர்கள் ஒன்றிணைந்து ஆயுதப் போராட்டத்தை நடத்துவது என்று தீர்மானம் எடுத்து களத்தில் இறங்கினார்கள்.

ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்தது என்று எழுதுவதிலும் பார்க்க தோற்கடிக்கப்பட்டது என்பதே மிகவும் பொருத்தமானது. அது எவ்வாறு என்பதை எழுத நூறு பக்கங்களாவது வேணடும்.

இவ்வாறு பாராளுமன்றத் முறையை புறக்கணித்த எமது போராளிகளின் எண்ணத்தை முறியடிக்க அந்த போராட்டத்தையே தோற்கடிக்க உலக நாடுகள் பல ஒன்றிணைந்தன. அந்த 'தோற்கடிப்பிற்காக, சில நாட்டுத் தலைவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்த தமிழ் அரசியல்வாதிகள் இன்னும் எங்கள் தலைவர்கள் என்று 'முழக்கமிட்ட வண்ணம்'' தேர்தலில் போட்டியிடுவதை நாம் இன்றும் காண்கின்றோம்.

இவற்றையெல்லாம் விரிவாக எழுதும் நோக்கம் எமது கதிரோட்டத்திற்கு நிச்ச்யமாக இல்லை. ஆனால் மீண்டும் பாராளுமன்ற அரசியலை நம்பிய வண்ணம் அந்த ஆசனங்களுக்காக ஆட்களைத் தேடும் பொதுத் தேர்தல் தான் இனிமேல் நடைபெறப் போகின்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த வேளையில் எமது மக்களுக்கு பாரதிய பொறுப்புக்கள் உள்ளன. எம்மிடம் வாக்கு கேட்டுவரும் பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களைப் பற்றிய கணிப்பீடு தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியமானது. எமது பார்வைக்கு கிட்டிய வேட்பாளர் பட்டியலிலிருந்து நாம் அறிந்து கொண்டவை எவையென்றால், வீட்டுச் சின்னத்தில் தமிழர் பகுதியில் போட்டியிடுகின்றவர்களிலும் பார்க்க ஏனைய கட்சிகள் அல்லது குழுக்கள் ஆகியவற்றில் தான் பல புதிய முகங்களாக இருந்தாலும், அவர்களிடத்தில் இளமைத் துடிப்பும் புலமையின் பலமும் ஆளுமையின் திரட்சி யும் உள்ளன என்பதைக் கண்டு கொண்டோம். இந்த சந்தர்ப்பங்களில் தனித்தனியாக பெயர்களைக் குறிப்பிட்டு எழுதும் எண்ணம் தோன்றாத நிலையில் எமது மக்கள் நன்கு யோசித்து பொய்யான வாக்குறுதிகளுக்கு மீண்டும் 'சோரம் போய்விடாமல் வாக்களித்து ஆளுமையும் இளமைத் துடிப்பும் உள்ளவர்களை அந்த ஆசனங்களில் அமர்வதற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதை ஒரு ஆலோசனையாகத் தருகின்றோம்.

சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS
உதயனில் விளம்பரங்கள் இதயத்தில் பதிந்த ஓவியங்கள் அனேக வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற பத்திரிகை உதயன்

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு சென்றடைய
நினைவஞ்சலி மற்றும் அந்தியேட்டி அழைப்பு விளம்பரங்கள் இலங்கையில் உள்ள பத்திரிகையில் பிரசுரிக்க எம்மை நாடுங்கள்...
நினைவஞ்சலி Posters மற்றும் அந்தியேட்டி அழைப்பு நூல் வடிவமைத்து அச்சிட்டு செய்துதரப்படும்...
+94 777-555026
6A, Perakumba Place, Wellawatte.

BASEMENT FOR RENT
Markham நகரில்
McCowan / 14th Ave.
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் இரண்டு அறைகள் கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு. Separate entrance உள்ளது. முழுமையான சமையல் பகுதி, மற்றும் washer, dryer அனைத்தும் உண்டு. சிறிய ஒரு குடும்பம் விரும்பத்தக்கது.
வாடகை: $1,350 மட்டுமே.
Call: (647) 675-4799

TEL: (416) 752-1524 --- FAX: (416) 752-6703 -- uthayannews@yahoo.com

# கனடியப் பிரதமரின் தந்தையார் பியர் ட்ரூடோ அவர்களது சிலைக்கு கறுப்பு வர்ணம் தீட்டி பாதகம் செய்த இனவாதிகள்

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

பின்னர் பொலிசார் நடத்திய விசாரணைகளில் இந்தச் செயலானது இனவாதத்தை பின்னணியாகக் கொண்டது என்பது அறியப்பட்டு அந்த செயலுக்கு காரணமானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகின்றது.

அண்மைக்காலங்களில் அமெரிக்காவிலும் கனடாவிலும் இடம்பெற்றுவரும் கறுப்பின மக்களுக்கு எதிரான இனவாதத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகளுக்கு எதிராக கனடியப் பிரதமர் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருவதை காரணமாகக் கொண்டே இந்த பாதகமான செயலில் இனவாதிகள் இறங்கியிருக்கலாம் என்றும் அரசியல் விமர்சகர்கள் தங்கள் கருத்துக்களை இணைய ஊடகங்களில் பதிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படங்கள், சிலையானது சம்பவத்திற்கு முன்னரும் பின்னரும் கொண்டுள்ள தோற்றங்களைக் காட்டுகின்றன.

Peel District School Board elementary schools are currently accepting online registrations for Kindergarten. The 217 public elementary schools are located across Brampton, Caledon and Mississauga.
For more information,visit
http://www.peelschools.org/kindergarten

NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!
உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.
- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs

Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca
MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1
ARI A. ARIARAN CPA, CGA
Chartered Profressional Accountant

# முல்லைத்தீவில் தமிழர்களின் காணிகளை அபகரித்து எல்லைப்படுத்தும் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்பு

புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குட்பட்ட தண்டுவான் பகுதியில் நில அளவைத் திணைக்களத்தின் நடவடிக்கை நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட போது மக்கள் எதிர்ப்பு ஒன்று திரட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

முல்லைத்தீவு ஏ-35 மற்றும் ஏ-9 வீதிகளிகளிலும் இந்த முதன்மை வீதிகளில் இருந்து பிரிந்து செல்லும் கிளை வீதிகளிலும் மக்களுக்கு சொந்தமான காணிகளை எல்லைப்படுத்தும் நடவடிக்கையில் மாவட்ட நில அளவைத்திணைக்களம் ஈடுபட்டது.

மக்கள் கூட்டத்தினை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த நில அளவைத்திணைக்கள அதிகாரிக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. அதனையடுத்து சம்பவ இடத்திற்கு ஒட்டுசுட்டான் பொலிஸார் சென்றனர்.

பொலிஸார் மக்களின் பிரச்சினையினை சுமுகமாக்க முயற்சித்த வேளை மக்களின் எதிர்பினை தொடர்ந்து இது குறித்து பிரதேச



செயலாளரிடம் இன்று எழுத்துமூலம் முறையிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# யாழ்ப்பாணத்தில் 15 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவாகின



இலங்கையில் தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை யாழ்ப்பாணத்தில் ஒரு தேர்தல் வன்முறை சம்பவம் உட்பட 15 தேர்தல் விதிமுறை மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கி.அமலராஜ் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இன்றுவரை 15 தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.


அவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறியதற்கான முறைப்பாடுகள் ஆகும்.

எனினும் ஒரேயொரு தேர்தல் வன்முறை சம்பவம் பதிவாகியுள்ளது. அது அண்மையில் தென்மராட்சியில் இடம்பெற்ற தனியார் ஊடக நிறுவனம் மீதான தாக்குதல் சம்பவமாகும். இதனை விட பாரிய சம்பவங்கள் எவையும் இதுவரை பதிவாகவில்லை.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தினை கவனத்தில் எடுத்து அரசியல் கடசிகளும்,சுயேட்சைக் குழுக்களும் சுகாதார முறைகளை பின்பற்ற வேண்டும். அதேபோல வாக்காளர்களும் சுகாதார முறைகளை பின்பற்றுவது அவசியமானது ஒன்றாகும்.

தேர்தல் சட்ட விதிகளை மீறி வைக்கப்பட்டுள்ள பதாகைகள் அகற்றப்பட்டுள்ளன. நிவாரணப் பொருட்கள் வழங்கிவிட்டு வேட்ப்பாளர்கள் அதனை முகப்புத்தகத்தில் பதிவிட்டாலும் அதுவும் தேர்தல் விதிமுறை மீறலே. எனவே வேட்ப்பாளர்கள் தேர்தல் சடடத்தை மதித்து ஜனநாயக தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

# தமிழ் மக்கள் மாற்றுத் தலைமையாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை பலப்படுத்த வேண்டும் என்கிறார் அனந்தி



தமிழரசுக் கட்சியினர் தங்களின் சுயலாப அரசியலுக்கு எவ்வாறு தன்னைப் கறிவேப்பிலையாக பயன்படுத் தினார்களோ அதேபோலவே தற்போது சசிகலா ரவிராஜை பயன்படுத்துகின்றனர். அத்துடன், தமிழ் மக்கள் மாற்றுத் தலைமையான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை பலப்படுத்த வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறுகையில், "தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிச்சயமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான மாற்று அணியாக தேர்தலில் களமிறங்கியுள்ளது. இம்முறை எமக்கு மக்கள் வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பவேண்டும்.

பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, அவர்கள் நாடாளுமன்றத்திற்குச் சென்று எதனைச் சாதித்தார்கள் என்பதை மக்கள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

எங்களுடைய இன விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளை அல்லது முன்னாள் போராளிகளை நான் அரசியலுக்குக் கொண்டுவர விரும்பினேன்.

இவ்வாறிருக்க, சுமந்திரன் மீது குண்டுத் தாக்குதல் நடத்த வந்ததாகக் கூறி, இன்றும் தமிழ் அரசியல் கைதிகளாக புனர்வாழ்வு பெற்று அரசியல் கைதிகளாக இருந்த முன்னாள் போராளிகள் இன்றைக்கும் தடுப்பில் இருக்கின்றார்கள்.

ஆனால், தேர்தல் காலத்தில் மட்டும் விடுதலைப் புலிகளுடைய அனுதாப வாக்குகளைப் பெறுவதற்கு மாறுபட்ட கருத்துக்களை சொல்லிக்கொண்டிருந்த சுமந்திரன் திடீர் அக்கறை கொண்டுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறிய அதே சுமந்திரன் தேர்தலுக்காக அரசியல் நாடகம் ஆடிவருகின்றார்.

இந்நிலையில் தற்போதைய தேர்தலில், சரிந்துள்ள வாக்கு





வங்கியை ஓரளவு சரி செய்ய தமிழ் தேசியக் கூட்ட்டமைப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவியை களமிறக்கியுள்ளனர்.

இந்தச் செயற்பாட்டினைப் பார்க்கும்போது, நான் அரசியலுக்கு வந்ததும் தமிழரசுக் கட்சி என்னை எவ்வாறு கறிவேப்பிலையாகப் பாவித்தது போலவே, சசிகலா ரவிராஜிற்கும் நடைபேறலாம். எனவே அவர் அவதானமாக இருக்க வேண்டும். அனுபவத்தின் அடிப்படையில் நான் இதனைக் கூறுகின்றேன்" என்று தெரிவித்தார்.

# மத்திய வங்கி விவகாரத்தில் ஜனாதிபதியின் தலையீடு காரணமாக வங்கி ஆளுனர் இராஜினாமா





மஹிந்த ராஜபக்ஷ இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் என்பதால் அவரின் வேலைகள் வரையறுக்கப்பட்டது எனவும் அதனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மத்திய வங்கியின் அதிகாரி-களை அழைத்து ஆலோசனை வழங்கியமை சரியானது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுத்தேர்தல் வேட்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மத்தியவங்கி தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக மஹிந்த ராஜபக்ஷ இருக்கையில் ஜனாதிபதி அனைத்து விஷயங்களிலும் தலையிட வேண்டுமா என்று நேற்று ஒரு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை க் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்கள் வங்கியின் ஆளுநர் டபிள்யூ.டி லக்ஷ்மன் தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார். இதற்கமைய அவர் தனது இராஜினாமா கடிதத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 16ம் திகதி மத்திய வங்கி அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்ற நிலையில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பாக செயற்பட முடியாவிட்டால் இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி நேரடியாகவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து தனிப்பட்ட காரணங்களால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# நிதி, லீசிங் நிறுவனங்களின் முறைகேடுகளை கண்டறிய மத்திய வங்கி மூவர் கொண்ட குழுவை நியமித்தது

நிதி நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டப்ளியு.டி.லக்ஷ்மன் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் சட்டத்துறை பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹணதீர இக்குழுவின் தலைவராக செயற்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியின் சட்டத்துறை பணிப்பாளர் கே.ஜி.பி.சிறிகுமார மற்றும் மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்யும் பிரிவின் பணிப்பாளர் ஜே.பி.கம்லத் ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

குறிப்பாக மத்திய வங்கியில் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் பினான்ஸ் மற்றும் லீசிங் வழங்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி நிறுவனங்களினால் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றபோது இடம்பெறும் சமூகம் அங்கீகரிக்காத செயற்பாடுகள் மற்றும் இவை எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பது பற்றியும் கண்டறிந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குமாறு குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு அதன் அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன்இ வங்கித்துறை மற்றும் சட்டத்துறை நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை தொடர்புகொண்டு இந்த அறிக்கையை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கி ஆளுநரினால் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.



# ராணுவ வீரர் பழனியின் உடல் சொந்த கிராமத்தில் 21 குண்டுகள் முழங்க ராணுவ மரியாதையுடன் நல்லடக்கம்



லடாக் எல்லையில் சீன ராணுவத்தால் தாக்கப்பட்டு வீரமரணம் அடைந்த ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீரர் பழனியின் உடல் 21 குண்டுகள் முழங்க ராணுவ மரியாதையுடன் சொந்த கிராமத்தில் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.கிழக்கு லடாக் எல்லையில் இந்திய சீன ராணுவத்தினரிடையே கடந்த 15ம் தேதி ஏற்பட்ட மோதலில் இந்திய ராணுவ வீரர்கள் 20 பேர் உயிரிழந்தனர். இதில் வீர மரணம் அடைந்த ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் கடுக்கலூரைச் சேர்ந்த காளிமுத்து மகன் ஹவில்தார் பழனியின் உடல் ராணுவ விமானம் மூலம் மதுரை விமான நிலையம் வந்தடைந்தது.

விமான நிலையத்தில் வீரர் பழனியின் உடலுக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் டி.ஜி.வினய், காவல்துறை ஆணையர் டேவிட்சன் தேவாசீர்வாதம், தென்மண்டல ஐஜி சண்முக ராஜேஸ்வரன், எம்பி வெங்கடேசன், திருப்பரங்குன்றம் எம்எல்ஏ சரவணன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.அதனையடுத்து அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் சொந்த ஊருக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸில் இருந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ராணுவ வாகனத்திற்கு அவரது உடல் மாற்றப்பட்டு ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியிலிருந்து கடுக்கலூர் கிராமம் வரை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

ராணுவ வாகனத்தில் இருந்து பழனியின் உடலுக்கு தேசியக்கொடி போர்த்தி , ராணுவ பேண்டு வாத்தியம் முழங்க அவரது கடுக்கலூர் வீட்டிற்கு அதிகாலை 3.15 மணிக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு ராணுவ வீரர்கள் பழனியின் உடலை சுமந்து சென்று வீட்டின் முன் வைத்து, துப்பாக்கியை தலைகீழாகப் பிடித்து மரியாதை செலுத்தினர்.பழனி உடலைக் கண்டதும் அவரது தந்தை காளிமுத்து, தாய் லோகாம்பாள், பழனியின் மனைவி வானதிதேவி, குழந்தைகள் பிரசன்னா, திவ்யா, அவரது சகோதரர் இதயக்கனி மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர்.

தொடர்ந்து பழனியின் உடலுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவராவ், காவல் கண்காணிப்பாளர் வீ.வருண்குமார், பரமக்குடி எம்எல்ஏ சதன் பிரபாகர், அதிமுக மாவட்டச் செயலர் எம்.ஏ.முனியசாமி ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அப்போது தமிழக அரசின் சார்பில் ரூ.20 லட்சத்துக்கான காசோலையை அவரது குடும்பத்தாரிடம் ஆட்சியர் வழங்கினார்.

பழனியின் உடலை நல்லடக்கம் செய்வதற்காக அவரது வீட்டுக்கு எதிர்ப்பகுதியில் உள்ள பிரதான சாலையோரம் சொந்த இடத்தில் இன்று காலை 6.30 மணி முதல் பணிகள் நடைபெற்றது. முன்னதாக குடும்பத்தினரின் பாரம்பரிய சடங்குகள் முடிந்தவுடன் அவரது உடலை ராணுவ வீரர்கள் காலை 7.05 மணிக்கு கொண்டு வந்தனர்.வழியில் பொதுமக்கள் மலர்தூவி கண்ணீரஞ்சலி செலுத்தினர். பின் வீரர் பழனியின் உடலில் போர்த்தியிருந்த தேசியக்கொடி முறைப்படி மரியாதையுன் மடிக்கப்பட்டு பழனியின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின் சோககீதம் இசைக்கப்பட்டு 21 குண்டுகள் முழங்க காலை 7.45 மணிக்கு வீரர் பழனியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. முன்னதாக பழனியின் மகன் பிரசன்னா(10) சடங்குகளை செய்தார்.

# இந்தியாவில் இதுவரையில்லாமல் ஒரே நாளில் 12,881 பேர் பாதிப்பு; 334 பேர் உயிரிழப்பு: மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தகவல்

இந்தியாவில் இதுவரையில்லாமல் கரோனா வைரஸால் கடந்த 24 மணிநேரத்தில் 12 ஆயிரத்து 881 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 334 பேர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து 7வது நாளாக பாதிப்பு 10 ஆயிரத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.இந்தியாவில் ஒட்டுமொத்தமாக கரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 3 லட்சத்து 66 ஆயிரத்து 946 ஆக அதிகரித்துள்ளது. இதில் குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 324 ஆகவும், சிகிச்சையில் இருப்போர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 384 ஆகவும் இருக்கிறது.

இந்தியாவில் கரோனாவில் குணமடைந்து வருவோர் சதவீதம் 52.95 ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவில் நேற்று 334 பேர் உயிரிழந்த நிலையில் ஒட்டுமொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 12 ஆயிரத்து 237 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 114 பேரும், டெல்லியில் 67 பேரும், தமிழகத்தில் 48 பேரும் உயிரிழந்துள்ளனர். குஜராத்தில் 27 பேர், உத்தரப் பிரதேசத்தில் 18 பேர், ஹரியாணாவில் 12 பேர், மேற்கு வங்கத்தில் 11 பேர், கர்நாடகாவில் 8 பேர், பஞ்சாப், மத்தியப் பிரதேசத்தில் தலா 6 பேர், ராஜஸ்தானில் 5 பேர், பிஹாரில் 3 பேர், ஜம்மு காஷ்மீர், ஆந்திராவில் தலா 2 பேர் உயிரிழந்தனர். சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், புதுச்சேரி, தெலங்கானா, உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் நிகழ்ந்த உயிரிழப்புகளில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 1,409 பேரும், டெல்லியில் 437 பேரும், தமிழகத்தில் 49 பேரும் பலியாகியுள்ளனர்.

குஜராத்தில் 28 பேர், உத்தரப் பிரதேசம், ஹரியாணாவில் தலா 18 பேர், மேற்கு வங்கத்தில் 10 பேர், ராஜஸ்தானில் 7 பேர், மத்தியப் பிரதேசத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். கர்நாடகாவில் 5 பேர், தெலங்கானாவில் 4 பேர், சத்தீஸ்கர், பிஹார், ஜம்மு காஷ்மீர், ஜார்க்கண்ட், பஞ்சாப், புதுச்சேரி, உத்தரகாண்டில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர்.இன்று காலை 9 மணி நிலவரப்படி மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:''மகாராஷ்டிர மாநிலத்தில் பலியானோர் எண்ணிக்கை 5,651 ஆக அதிகரித்துள்ளது.

அடுத்த இடத்தில் உள்ள டெல்லியில் உயிரிழப்பு 1,904 ஆகவும், குஜராத்தில் உயிரிழப்பு 1,560 ஆகவும், தமிழகத்தில் பலி எண்ணிக்கை 576 ஆகவும் அதிகரித்துள்ளது. மேற்கு வங்கத்தில் பலி எண்ணிக்கை 506 ஆகவும், மத்தியப் பிரதேசத்தில் உயிரிழப்பு 482 ஆகவும், உத்தரப் பிரதேசத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 435 ஆகவும், ராஜஸ்தானில் பலி எண்ணிக்கை 313 ஆகவும் அதிகரித்துள்ளது.தெலங்கானாவில் பலி எண்ணிக்கை 192 ஆகவும், ஹரியாணாவில் 130 ஆகவும், ஆந்திராவில் 90 ஆகவும் இருக்கிறது. கர்நாடகாவில் 102 பேரும், பஞ்சாப்பில் 78 பேரும் பலியாகியுள்ளனர். ஜம்மு காஷ்மீரில் 65 பேரும், பிஹாரில் 44 பேரும், ஒடிசாவில் 11 பேரும், கேரளாவில் 20 பேரும், இமாச்சலப் பிரதேசத்தில் 8 பேரும், ஜார்க்கண்டில் 8 பேரும், உத்தரகாண்டில் 26 பேரும், அசாமில் 8 பேரும் உயிரிழந்துள்ளனர். மேகாலயாவில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுச்சேரியில் 3 பேர் உயிரிழந்தனர். மகாராஷ்டிர மாநிலத்தில் கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 672 ஆக அதிகரித்துள்ளது. குணமடைந்தோர் எண்ணிக்கை 59,166 ஆக உயர்ந்துள்ளது. அதைத் தொடர்ந்து 2வது இடத்தில் உள்ள தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 193 ஆகவும், குணமடைந்தோர் எண்ணிக்கை 27,624 ஆகவும் அதிகரித்துள்ளது.3வது இடத்தில் உள்ள டெல்லியில் 47,102 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 17,457 பேர் குணமடைந்துள்ளனர். 4வது இடத்தில் உள்ள குஜராத்தில் 25,093 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

17,430 பேர் குணமடைந்தனர். ராஜஸ்தானில் 13,543 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 11,244 பேரும், உத்தரப் பிரதேசத்தில் 14,598 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்கு வங்கத்தில் 12,300 பேரும், ஆந்திராவில் 7,701 பேரும், பஞ்சாப்பில் 3,497 பேரும், தெலங்கானாவில் 5,675 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜம்மு காஷ்மீரில் 5,406 பேர், கர்நாடகாவில் 7,734 பேர், ஹரியாணாவில் 8,832 பேர், பிஹாரில் 6,492 பேர், கேரளாவில் 2,697 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,326 பேர் குணமடைந்துள்ளனர். புதுச்சேரியில் 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் புதுச்சேரியில் 109 பேர் குணமடைந்தனர். மிசோரத்தில் 121 பேர், சிக்கிமில் 70 பேர், மணிப்பூரில் 552 பேர், கோவாவில் 656 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அருணாச்சலப் பிரதேசத்தில் 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தமான் நிகோபர் தீவுகளில் பாதிக்கப்பட்டோர் யாருமில்லை''. இவ்வாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சென்னையில் வீடுகள்தோறும் பரிசோதனை மேற்கொள்ள 10,000 வெப்பமானி; 1,000 பல்ஸ் ஆக்ஸிமீட்டர்: மாநகராட்சி ஆணையர் தகவல்



பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகள்தோறும் சென்று பரிசோதனைகள் மேற்கொள்வதற்காகவும், மருத்துவ முகாம்களில் பயன்படுத்துவதற்காகவும், காய்ச்சலைக் கண்டறிவதற்காகவும் 10 ஆயிரம் வெப்பமானி மற்றும் 1,000 பல்ஸ் ஆக்ஸிமீட்டர் வழங்கப்பட்டுள்ளன என்று மாநகராட்சி ஆணையர் பிரகாஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னை மாநகராட்சி இன்று (ஜூன் 18) வெளியிட்ட செய்தி வெளியீடு:''பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக கரோனா வைரஸ் தொற்று தடுப்புப் பணிக்காக கடந்த 15ம் தேதி முதல் காய்ச்சல் முகாம் சென்னையில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 200 கோட்டங்களிலும், ஒரு கோட்டத்திற்கு இரண்டு மருத்துவ முகாம்கள் மற்றும் நடமாடும் மருத்துவ முகாம்கள் என 680 மருத்துவ முகாம்கள் நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகள்தோறும் சென்று பரிசோதனைகள் மேற்கொள்வதற்காகவும், மருத்துவ முகாம்களில் பயன்படுத்துவதற்காகவும், 1 முதல் 15 மண்டலங்களுக்கு காய்ச்சலைக் கண்டறியும் 10 ஆயிரம் வெப்பமானி கோட்ட நல மருத்துவ அலுவலர், வீடுகள்தோறும் சென்று கணக்கெடுக்கும் களப்பணியாளர்கள், கண்காணிப்பு மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் நோயாளிகளைத் தொடாமல் அதி விரைவில் நோயாளிகளின் வெப்பநிலையைக் கண்டறிந்து, வெப்பநிலை அதிகம் உள்ளவர்களுக்கு மேல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் வீடுகள்தோறும் சென்று கணக்கெடுக்கும் களப்பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் அனைவருக்கும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் (Pulse Oxymeter) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, 1,000 பல்ஸ் ஆக்ஸிமீட்டர் தண்டையார்பேட்டை, ராயபுரம் மற்றும் திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இனிவரும் நாட்களில் மீதமுள்ள அனைத்து மண்டலங்களுக்கும் பல்ஸ் ஆக்ஸிமீட்டர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மருத்துவ முகாம்கள் மற்றும் புற நோயாளிகள் பிரிவுக்கு சிகிச்சைக்கு வருபவர்களின் நாடித்துடிப்பு, சுவாசம், ஆக்சிஜன் செறிவு ஆகியவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் உடனடியாக நோயின் தாக்கம் கண்டறியப்படுகிறது.

இந்த உபகரணங்கள் மூலம் கரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, மேல் சிகிச்சை தேவைப்படின் பரிந்துரைக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் பிரகாஷ் தெரிவித்துள்ளார்''. இவ்வாறு சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

# இலங்கை பொதுத் தேர்தல்: மட்டக்களப்பு மாவட்ட நிலவரம்

*- சிவா பரமேஸ்வரன்-மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்*



இலங்கையின் கிழக்கு மாகாணம் நாட்டில் சற்று தனித்துவமானது. அங்கு மூவின மக்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் ஏறக்குறைய சம அளவில் உள்ளனர். முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையாக தமிழ் மொழியைப் பேசின-ாலும், தங்களை தனித்துவமான ஒரு இனமாக அடையாளப்படுத்துகின்றனர்.

இந்திய மக்கட்தொகையில் முஸ்லிம்கள் 13% இருந்தாலும், அவர்கள் தம்மை தனியொரு இனமாக கூறிக் கொள்வதில்லை.

மொழிவாரியாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை இருந்தாலும், கலை கலாச்சாரம், அரசியல் சமூகச் சூழல், பொருளாதாரம் என்று வரும்போது வேறுபாடுகளே அதிகம் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அதிகமாக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் வாழ்கிறார்கள்.

முதலில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் சூழல் பற்றிய பார்வை. இங்கு மக்கட்தொகையில் என்பது 72% தமிழர்கள்.



தெரிவாகும் உறுப்பினர்கள் எண்ணிக்கை ஐந்து. கட்சி அல்லது சுயேச்சைக் குழு சார்பில் நிறுத்தப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை எட்டு.

கடந்த 2015 தேர்தலில் த தே கூ சார்பில் மூவரும், ஐ தே க (ரிஷாத் கட்சி) மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தலா ஒருவரும் தெரிவாகியிருந்தனர்.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு: (இலங்கை தமிழரசுக் கட்சி)**

கடந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த சீ.யோகேஸ்வரன் மற்றும் ஞா.சிறிநேசன் இம்முறையும் போட்டியிடுகின்றனர். கி. துரைராஜசிங்கம் கடந்த 1994 முதல் 2000 வரை நாடாஷளுமன்ற உறுப்பினராக இருந்தவர். அவர் 20 ஆண்டுகளுக்கு பிறகு இத்தேர்தலில் போட்டியிடுகிறார். 2015ல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட சாணக்கிய ராகுல ராஜபுத்திரன் மற்றும் மட்டக்களப்பு ஓய்வு பெற்ற அரசாங்க அதிபரான இருந்த மா.உதயகுமார் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள்.

டெலோ சார்பில் கடந்த 1989-94 வரை உறுப்பினரான இருந்த கோ. கருணாகரம் மற்றும் முதல் முறையாகப் போட்டியிடும் சட்டத்தரணி ந. கமலதாஸ் ஆகியோரும் புளொட் சார்பில் பொறியிலாளரான மு.ஞானபிரகாசமும் வேட்பாளர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்கள்.

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன**



2015 தேர்தலில் த தே கூ பட்டியலில் புளொட் சார்பில் தெரிவாகியிருந்த ச.வியாழேந்திரன் கட்சிமாறி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான 51 நாள் அரசில் பிரதி அமைச்சராக இருந்தவர். இம்முறை அக்கட்சியின் தலைமை வேட்பாளராக பெயரிடப்பட்டுள்ளார். இக்கட்சியின் வேட்பாளர்கள் அனைவரும் தமிழர்கள். கடந்த 2004 ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளின் பின்புலத்தில் உருவாக்கப்பட்ட த தே கூ வேட்பாளராகப் போட்டியிட்ட சே.ஜெயானந்தமூர்த்தி, யுத்தகால நெருக்கடியால் இலண்டனுக்கு இடம்பெயர்ந்தார். நாடாளுமன்ற அனுமதி பெற்று விடுப்பில் இருந்த அவர், இலங்கையின் எம் பி பதவி முடிந்த பிறகு, நாடுகடந்த தமிழீழ அரசில் ஒரு உறுப்பினராகத் தேர்வாகியிருந்தார். இலங்கைக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டிருந்தவர்களின் அவரும் ஒருவர்.

மைத்திரி-ரணிலின் ஆட்சியில் ஏற்பட்ட சுமுக நிலையை அடுத்து அவர் நாடு திரும்பினார். த தே கூட்டமைப்பு அவரை கவனத்தில் எடுக்கவில்லை. பின்னர் ஐ தே க, த வி கூ, மற்றும் விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா) தமிழர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்று பல கட்சிகளுக்கு தாவிய இவர் தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சியின் ஒரு வேட்பாளர்.

**தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்**

விடுதலைப் புலிகள் பிளவுபட்ட பின்பு, கருணாவால் உருவாக்கப்பட்ட கட்சி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (டி எம் வி பி). மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தக் கட்சியின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கு பின்புலமாக இருந்தது. கருணா இலண்டனுக்குச் சென்ற பிறகு கட்சி சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்) வசம் வந்தது. கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தலில், ஐ ம சு மு ஆட்சியை கைப்பற்றியது. பிள்ளையான் முதலமைச்சரானார். கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் என்கிற பெருமையும் அவருக்கு உண்டு. ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில்-எதிரிகளில் ஒருவரான இவர் சிறையில் விளக்கமறியல் கைதியாக வைக்கப்பட்டுள்ளார்.



இந்தக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஞா. கிருஷ்ணபிள்ளையும் இடம்பெற்றுள்ளார்.

ஜோசப் பரராஜசிங்கம் 2005 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டாலும், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மைத்திரி-ரணில் தலைமையிலான அரசிலேயே பிள்ளையான் கைது செய்யப்பட்டார். ஐ ம சு மு பங்காளிக் கட்சியாக இருந்தாலும், 2015 தேர்தலிலும் பிள்ளையான் கட்சி தனித்து போட்டியிட்ட போதிலும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷவை இக்கட்சி ஆதரித்தது.

ஹகருணா ஒரு காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவராக வலம் வந்தவர். 2010 ஆம் ஆண்டு தேசியப் பட்டியலில் தெரிவாகி பிரதி அமைச்சராகவும் இருந்தார். 2015 அவரது சகோதரி ருத்திரமலர் போட்டியிட்டாலும் தெரிவாகவில்லை. இம்முறை தனது மனைவியை தாமரை மொட்டுக் கட்சியில் புகுத்துவதற்கு எடுத்த முயற்சி எட்டக்கனியான நிலையில், தனது மனைவி வித்யாவதி தலைமையில் ஒரு சுயேச்சைக் குழுவை களமிறக்கியுள்ளார்.



கருணா அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை தமிழர் மகாசபை சார்பில் போட்டியிடுகிறார்.

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (விக்னேஸ்வரன் கட்சி):**

இக்கட்சியின் பிரதான வேட்பாளர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி. இவர் ஏறனவே பொதுஜன முன்னணியில் (சந்திரிகாவின் இரண்டாவது ஆட்சியில்) தேசியப் பட்டியல் உறுப்பினராக தேர்வாகி, தேசிய நல்லிணக்க துறையின் பிரதி அமைச்சராக இருந்தவர். கடந்த தேர்தலில் ஐ தே கா வில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இம்முறை அவரது மகன் கோபிநாத்தும் போட்டியிடுகிறார்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈரோஸ், ஐ தே க, போன்ற கட்சிகளும் போட்டியிடுகின்றன.

**முஸ்லிம் கட்சிகள்:**

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் ஒரு பிராதான பங்காளிக் கட்சியாக இருக்கின்ற போதிலும் மு கா இம்முறையும் தனித்து கடந்த முறை தெரிவாகியிருந்த அலி சாகிர் மௌலானாவுடன், மாகாண முன்னாள் முதலமைச்சர் நசீர் அகமது, ஆகியோர் அக்கட்சியின் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். கடந்த தேர்தலில் ஐ தே கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட மற்றோர் முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சஜித் தலைமையிலான ஐ ம ச இணைந்து போட்டியிடுகிறது.

கடந்த முறை தேர்வான அக்கட்சியின் அவைத்தலைவர் எஸ் எச் அமீர் அலி தலைமை வேட்பாளராக பெயரிடப்பட்டுள்ளார். அப்பட்டியலில் 3 முஸ்லிம்கள் 5 தமிழர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பிரிந்து போட்டியிட்டாலும், வழமை போல் முஸ்லிம் கட்சிகளுக்கு தலா ஒரு இடம் கிடைக்கும் எனும் எதிர்ப்பார்ப்பு அவர்களிடையே உள்ளது. கடந்த 1989 ஆம் ஆண்டு தொடக்கம் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆட்சிவரை நாடாளுமன்றத்தில் செல்வாக்குள்ள அரசியல்வாதியாகவும் அமைச்சராகவும் இருந்தவர் ஹிஸ்புல்லா. 2015ல் தோல்வியடைந்தாலும்,தேசியப் பட்டியலில் உள்வாங்கப்பட்டு அமைச்சராகவும் இருந்தார். பின்னர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.



மட்டக்களப்பு காம்பஸ் என்கிற தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் தெற்கில் சிங்களப் பேரினவாதிகள் உருவாக்கிய சர்ச்சைக் காரணமாக, இவர் ஆளுநர் பதவியைத் துறக்கும் நிலை ஏற்பட்டது. அதாவது கடந்த ஆண்டு ஈஸ்டர் தின குண்டு வெடிப்புக்கு பிறகு இவர், ஆசாத் ஆலி போன்றோர் பௌத்த பேரினவாத அழுத்தம் காரணமாக ஆளுநர் பதவியிலிருந்து விலகும் சூழல் ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகிய ஹஸன் அலி, பீர் சேகு தாவூத் ஆகியோர் உருவாக்கிய ஐக்கிய சமாதான முன்னணி தனைத்துப் போட்டியிடுகின்றது. பிரதான வேட்பாளர்களாக ஹிஸ்புல்லாவும், பீர் சேகும் தாவூதும் உள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் இக்கட்சி கோத்தாவை ஆதரித்தது. ஆனாலும் இத்தேர்தலில் எந்தவொரு முஸ்லிம் கட்சிக்கும் முக்கியத்துவம் இல்லாமல் போயிற்று.

**களநிலை:**

தமிழ் வாக்குகள் பரவலாக பிரியும் நிலை உள்ளது. எனினும் 3 ஆசனங்களை தமிழர்கள் பெறக் கூடும். த தே கூ மீது கடும் விமர்சனங்கள் நிலவுவதால் தமிழ் வாக்குகளை பிள்ளையானும், வியாழேந்திரனும் உடைக்கக் கூடும். கடந்த தேர்தலில் வென்ற மூன்று இடங்களைக் கூட த தே கூ போராடித்தான் வெல்லக் கூடிய சூழல் அங்கு நிலவுக-றது. இந்தக் களநிலைமையை கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்ட சவாலா-கவே கருத முடியும். கூட்டமைப்பு மைத்ரி-ரணில் தலைமையிலான ஹநல்லிணக்க அரசைஹ ஆதரித்தாலும் மக்களுக்குத் தேவையானவற்றை பெற்றுக் கொடுக்கவில்லை எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ளது.



இளம் வாக்காளர்கள் அபிவிருத்தி, வேலை வாய்ப்பு போன்ற விடயங்களால் கவரப்பட்டுள்ளனர். கூட்டமைப்பு வெற்றுக் கோஷங்களை மட்டுமே எழுப்புகிறது எனும் கருத்தும் மக்களிடையே உள்ளது.

பிள்ளையான் சிறையில் இருப்பதால், அவரால் களத்தில் இறங்கி வாக்கு சேகரிக்க இயலாது. ஆகவே எந்த அளவுக்கு அவரது கட்சிக்கு வாக்குகள் கிடைக்கும் என்பது கேள்விக் குறியாக உள்ளது. தேர்தலுக்கு முன்னர் பிள்ளையான் சிறையிலிருந்து வெளிவந்தால் அது கூட்டமைப்புக்கு சவாலாக இருக்கும்.

மொட்டுக் கட்சியின் வேட்பாளர்கள் அனைவரும் தமிழர்கள். அவர்களும் தமிழ் வாக்குகளையே இலக்கு வைத்துள்ளனர். கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் பிள்ளையான் கட்சியைவிட மொட்டுக் கட்சிக்கு வாக்களிப்பதே உசிதம் என்று எண்ணக் கூடும்.

முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை அவர்களது இலக்கு தலா ஒரு ஆசனம். இது யதார்த்தத்தில் சாத்தியமில்லை. என்றாலும், தமிழர்களின் வாக்குகள் சிதறினால், அதன் பலன் முஸ்லிம் கட்சிகளுக்கே செல்லும். எனவே, தமிழர்கள் தமது வாக்குகள் சிதறாமல் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அது கூட்டமைப்பின் கொள்கை மற்றும் பிரச்சாரத்திலேயே தங்கியுள்ளது.

மலேசிய மடல்:

# கொரோனாவின் சாம்ராஜியம் விரிவடைகிறது புதிய மாணவர் சமுதாயம் உதயம்!



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 17:

கொடிய ஆட்கொல்லி கிருமியான கோவிட்-19இன் பரவலும் தாக்குதலும் தங்கு தடையின்றி உலகெங்கும் தொடர்கின்றது. இந்த நிலையில், கொரோனாவின் எல்லை தொடர்ந்து விரிவடைவதாக உலக சுகாதார நிறுவனமும் உலக நாடுகளை எச்சரித்துள்ளது. மலேசியத் திருநாட்டைப் பொறுத்தவரை கொரோனாவின் தாக்கம் தற்பொழுது கட்டுப்பாட்டில் இருந்தாலும் மலேசிய அரசும் மக்களும் எச்சரிக்கையையும் விழிப்புணர்வையும் விட்டுவிட வில்லை.



இத்தகைய சுழலில்தான், வரும் ஜூலைத் திங்கள் முதல் சிறார் மையங்களும் பாலர் பள்ளிகளும் திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. அத்துடன், சிறாரின் பாதுகாப்பு மற்றும் சுகாதார அம்சங்களில் சிறார் மையங்களின் பொறுப்பாளர்களும் பெற்றோரும் இரட்டை கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

மாணவர்கள் சிந்தனையாலும் செயலாலும் செப்பம் பெறும் இடம் கல்விச் சாலைகள்தாம். குறிப்பாக, இளம் பருவத்தில் மாணவச் செல்வங்கள் எந்த அளவிற்கு பக்குவம் பெறுகிறார்களோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் பெரியவர்களாகி பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்க்கல்வி நிலையங்களுக்குச் செல்லும்போதும் அவர்களின் அறிவும் ஆற்றலும் வெளிப்படும்.



மலேசியா போன்ற பல இன மக்கள் வாழும் நாடுகளில் சமூக ஒருங்கிணைப்பும் சமய நல்லிணக்கமும்தான் மக்களின் ஒற்றுமைக்கு அடித்தளம். இந்த அடித்தளம் உருவாகும் இடம் கலவிச் சாலைகள்தான். ஆனால், இத்தகைய நல்லிணக்கக் கூற்றுக்கு பங்கம் ஏற்படும் வகையில் மாணவர்கள் ஒருவரை ஒருவர் தொடக்கூடாது நெருங்கிப் பழகக்கூடாது சமூக இடைவெளியுடன் பழக முயற்சிக்க வேண்டும் ஏனைய மாணவர்களின் உடைமைகளைத் தொடக்கூடாது அவசியம் முகக்கவசம் அணிய வேண்டும் என்றெல்லாம் இளம் குழந்தைகளுக்கு வீட்டில் பெற்றோரும் சிறார் மையங்களிலும் பாலர் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களும் வலியுறுத்துவைக் காணும் பிஞ்சு உள்ளங்கள் வெம்பி விடாதா என்று சமூக ஆர்வலர்களும் கல்வியாளர்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.



சிறுவர்கள் என்றாலே கைதட்டி பாடுவதும் கைகோத்து ஆடுவதும் கூடி மகிழ்வதும் சேர்ந்து உண்பதும் மற்றவர்களின் பொருளை தொட்டு உணர்வதும் மிகவும் இயல்பானது. தவிர, வெவ்வேறு மொழி, பண்பாடு, கலாச்சரம், சமயங்களைச் சேர்ந்த சிறார்கள் ஒருவரோடு ஒருவராக கலந்து உறவாடும்போதும் ஒருங்கிணைந்து செயல்படும்போதும் தங்களுக்குள் இணக்கமான போக்கினை மெல்ல வளர்த்துக் கொள்வர்.

மொத்தத்தில் இனம், மொழி, சமயம், பண்பாடு உள்ளிட்ட எல்லைகளைக் கடந்து, எதிர்காலத்தில் ஒன்றுபட்ட சமுதாயமாக விளங்குவதற்கான அடிப்படை உருவாகும் இடமே பாடசாலைகள்தான். சிறார்கள் வீட்டு எல்லையைக் கடந்து முதன் முறையாக சமுதாய வீதியில் வலம் வரும் இடம் பாலர் பள்ளிகள்தாம்.

இப்படிப்பட்ட சூழலில், இதற்கெல்லாம் இடம்தராத வகையில் முகத்தில் புன்னகை தவழ்கிறதா, கோபம் கொப்பளிக்கிறதா அல்லது அழுகை அரும்புகிறதா என எதுவும் தெரியாத வகையில் முகத்தில் பாதியை மூடியபடி சுவாச கவசம் அணிந்த வண்ணம், அம்மா-அப்பா சொன்னபடி ஒருவரையும் தொடக்கூடாதே என்ற மிரட்சி ஒரு பக்கமாகவும்ம் ஆசிரியை கேட்டுக் கொண்டபடி யாரோடும் நெருங்கி உட்காரக் கூடாதே என்னும் மருட்சி இன்னொரு புறமாகவும் மனதில் நிழலாட நாள் முழுவதும் வகுப்பில் அமர்ந்திருக்கும் சிறார்தம் மனம் வாடித்தான் போகும்!

இதே மன நெருக்கடியுடன் காலமெல்லாம் பாடசாலைக்கு சென்று வரும் பாலகர்களின் மனதில் மகிழ்ச்சியும் துள்ளல் மேவிடும் ஆர்வமும் எங்ஙனம் ஏற்படும்?.

ஆனாலும் வேறு வழியும் புலப்படவில்லை இதற்கெல்லாம் மாற்று மார்க்கமும் புரியவில்லை ஒருவருக்கும்.

கரணம் தப்பினால் மரணம் என்னும் நிலையை கொரோனா கிருமி ஏற்படுத்தி இருப்பதால், எல்லாவற்றையும்விட உயிர்தான் மிக முக்கியமானது என்னும் அடிப்படையில் சுவாச கவசத்தை அணியத்தான் வேண்டும் சமூக இடைவெளியையும் தற்காக்கத்தான் வேண்டும்.

எல்லாம் சரி! இந்த நிலை தொடர்ந்தால், எத்தனைக் காலத்திற்கு மாணாக்கர்கள் இதை எதிர்கொள்வது? இதற்கான விடை ஒருவரிடமும் இல்லாத நிலையில், காலம் வகுத்த கட்டளைக்கு ஏற்ப வாழ்ந்துதான் ஆக வேண்டும். உடலில் ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர் நிலைத்திருக்க வேண்டும் என்றால் இதில் சிறுவர் என்ன? பெரியவர் என்ன?? கொரோனா தொற்றில் இருந்து தப்பிக்க இந்த நிலையை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

மொத்தத்தில், ஒரு புதிய மாணவர் சமுதாயம் உருவாகி விடுமோ என்ற அச்சம் பொதுவாக அனைத்துத் தரப்பினரிடமும் எழுந்துள்ளது. இதற்கான விடையையும் தீர்வையும் எதிர்காலம் வழங்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்வைத் தொடர்வதைத் தவிர வேறு வழியேது?

காத்திருப்போம் காலம் பதில் சொல்லும்!

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*




## REQUEST FOR PROPOSAL (RFP)

**PEEL DISTRICT SCHOOL BOARD**

5650 Hurontario Street

Mississauga, Ontario, L5R 1C6

**RFPMC20-4494**

**For the Services of an Integrity Commissioner**

**CLOSING DATE:** Monday, July 6, 2020 @ 3:00 p.m.

This RFP is now available for electronic download from the Bonfire portal at

**https://peelsb.bonfirehub.ca/**

and from the Biddingo portal at

**www.biddingo.com**

Detailed submission instructions can be found in the Bonfire portal.

*Proposals must be submitted in the BONFIRE portal (as outlined in the RFP) on or before the Submission Deadline. Proposals submitted after the Submission Deadline will be rejected.*

peel District School Board

www.peelschools.org

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25

வருடங்கள்

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- ✦ தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ✦ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- ✦ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- ✦ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- ✦ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- ✦ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®


EXECUTIVE Award 100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222


647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# COVID-19 லிருந்து மக்களை பாதுகாப்பாக வைத்திருக்க நீங்கள் மாற்றத்தை உருவாக்கியுள்ளீர்கள்

ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்ள நாம் அனைவரும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.



COVID-19 உங்களுக்கு உள்ளது என்று நீங்கள் கவலைப்படுகிறீர்கள் அல்லது வைரஸுக்கு ஆளாகியுள்ளீர்கள் என்றால் நீங்கள் பரிசோதனை செய்துக்கொள்ளுங்கள்.




சமூக இடைவெளியை பயிற்சி செய்யுங்கள், இரண்டு மீட்டர் இடைவெளியில் இருங்கள்.



சமூக இடைவெளி விலகல் சவாலாக இருக்கும்போது முகக் கவசம் அணியுங்கள்.



அடிக்கடி கைகளை கழுவுங்கள்.

உள்ளேயோ அல்லது வெளியேயோ , பாதுகாப்பாக இருங்கள். உயிர்களைக் காப்பாற்றுங்கள்.

**ontario.ca/coronavirus** ல் மேலும் அறிந்து கொள்ளவும்
ஒன்டாறியோ அரசங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# மரண அறிவித்தல்

தரணியில் உதித்தல்
02-02-1949



இயற்கை எய்தல்
15-06-2020

செம்பொற்றுலைத் தாலத் தகையோன்

## திரு.சிவகுருநாதன் ரங்கராஜா (S.L.A.S, SPGR)

B.A,B.com, M.Sc- முன்னாள் வடமாகாண முதற் பிரதம செயலாளரும், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரும், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செயலாளரும், இணைந்த வடக்கு கிழக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர்-திட்டமிடலும், முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசகரும், யாழ். பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் இரங்கராஜா அவர்கள் 15-06-2020 திங்கட்கிழமை அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், பொன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கு.பொ.சிவகுருநாதன் (நாராயணதாசன்), ரோகினியம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், செம்மனச்செல்வி அவர்களின் ஆருயிர்க் கணவரும், கு.பொ.சி. வரதராஜா (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி - யாழ்ப்பாணம்), பாக்கியலட்சுமி, சௌந்தர்ராஜன் (பொறியியலாளர் Bahrain), விஜயலட்சுமி (யாழ்ப்பாணம்), ஜெயலட்சுமி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மாம்பிகை, காலஞ்சென்ற புலேந்திரன் (பேருந்து நடத்துனர்), மதிவதனி, காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் (கிராம சேவையாளர்), காலஞ்சென்ற ஞானசம்பந்தன், நாவுக்கரசன், கலைமகள், ஆரூரன், சுந்தரமூர்த்தி, வாதவூரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அரவிந்தன் (மேலாளர்). அனந்தன் (மென்பொருள் பொறியியலாளர்), அரங்கன் (விமான ஓட்டி) ஆகியோரின் சிறிய தந்தையும். ஜனனி(மனிதவள முகாமையாளர்), கஜானி (இளங்கலைமாணி நடன, தமிழ் ஆசிரியர் கனடா), நளினி (மேற்பார்வையாளர், முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் மாகாணத் திறைசேரி) மாலினி (உதவி மேற்பார்வையாளர்), அகிலன், (தரக்கட்டுப்பாட்டு மேலாளர்) கிரிஷாந்தி (முன்னாள் தரவுப் பதிவாளர் சி.ஐ.ஆர்.எம்), அருணன் (மேற்பார்வையாளர்), அஞ்சனன் (சட்டத்தரணி) ஆகியோரின் தாய்மாமனும், மதுசூதனன் (பொறியியலாளர்) அவர்களின் பெரிய தந்தையும், சங்கீதா, கௌதமி, அஞ்சலா, கீர்த்தனா, சரண்யா, மானஸா, ஆரணி, அச்சுதன், அனிருத்தன், கிருஷ்ணா, ஆதித்யன், அர்ஜீனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 16-06-2020 செவ்வாய்க்கிழமை அன்று பி.ப 02:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பொரளை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு

சௌந்தரராஜா +973 3960 6349 (பஹறின்)
ஜெயலட்சுமி: +94 77 612 4530 (இலங்கை)
ஜனனி: +1763 283 8575 (அமெரிக்கா)
நளினி: +61 450 419 969 (அவுஸ்ரேலியா)
கிரிஷாந்தி: +447854 805204 (லண்டன்)
பாக்கியலட்சுமி +1 763 283 8435 (அமெரிக்கா)
விஜயலட்சுமி: +94 77 664 5537(இலங்கை)
கஜானி: 647 518 9391 (கனடா)
மாலினி: +49 159 0645 7082 (ஜேர்மனி)
அருணன்: +61 0434 701 791 (அவுஸ்ரேலியா)

# காலங்கள் வீணே கழிகின்ற இந்த நாட்களில் நல்ல நூல்களை வாசித்து பயன் பெறுவோம்

கொவிட்-19 என்ற வைரஸ் தற்பொழுது உலகத்தை வீட்டுக்குள் முடக்கி வைத்து அனவரையும் சடப்பொருளாய் ஆக்கியுள்ளது. காலங்கள், நேரங்கள் வீணே கழிகின்றன. இக்காலங்களில் நல்ல நூல்களை வாசித்து பயன் பெறுவோம். இக்கட்டுரை வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்காக எழுதப்பட்டதாகும். இந்த சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு இதனை முன் வைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் என மகாத்மா காந்தி கூறியிருப்பதை கருத்திற் கொண்டு வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும் என்பது நன்கு கற்றுத்தேர்ந்தவர்களின் அனுபவக் கூற்றாகும் என்பார்கள்.வாசிப்பு மனித மேம்பாட்டுக்கும் அறிவு வளர்ச்சிக்கும்,சமூக முன்னேற்றத்திற்கும், கலை கலாசார அபிவிருத்திற்கும் மிக்க இன்றியமையாதது.

உலக மக்களில் ஒரு பாதியினர் வாசிப்பதில் ஆர்வம் அற்றவர்களாக இருக்கின்ற பொழுது அதில் சிறு தொகுதியான மிக குறைவான மக்கள் தொகையினரே வாசிப்பதில் நிகழ்காலத்தில் ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக பாடசாலை மாணவர்கள் கூட வாசிப்பதில் ஆர்வம் காட்டுவது இப்பொழுது குறைவாகவே உள்ளது எனலாம்.

யார் ஒருவன் வாசிப்பதில், புதிய தேடலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மறுக்கின்றானோ அவன் வாழ மறுக்கின்றான் என்றே கூற வேண்டும். இவ்வாறு இருக்கின்றவர்களின் மனது அறியாமையின் சிகரமாகவே காணப்படுவதோடு வாழ்க்கை இன்பம் அற்று தூசிப்படிந்த மனநிலையையே ஏற்படுத்தும்.

வாசிப்பின் தேவை அதன் முக்கியத்துவம், அதன் தனிச்சிறப்பு, மகத்துவம் என்பவற்றை ஒவ்வொரு மனிதனும் மனதார உணர்ந்து செயற்படும் பொழுதே அவன் மனிதனாக உருவெடுக்கின்றான்.

ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, அப்துல் கலாம், அம்பேத்கார் போன்றோர் வாசிப்பின் உன்னத நிலையை அடைந்தோர் என்பது யாவரும் அறிந்ததே. இவர்கள் போன்றோர் இன்று பேசப்படுவதற்கு அவர்களின் வாசிப்பும் முக்கிய இடம்பெறுகின்றது.

ஒருவர் தான் வாழ்நாளில் வாசிப்பினை மேற்கொள்ளும் பொழுது அவன் புதுப்பிக்கபடுகின்றான், அவனின் எண்ணங்கள், சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. புதிய முயற்சிகளில் ஈடுபடுகின்றான், தன்னை உலகம் அறிந்துக் கொள்வதற்கு முன்பு அவன் தன்னை உலகிற்கு அறிமுகப்படுத்த முயல்கின்றான், எல்லாவற்றிக்கும் மேலாக மனிதனாக வாழ முயற்சி செய்கின்றான். இவை யாவும் வாசிப்பு என்ற உணர்வோடு பொருந்திய மருத்துவமே ஆகும்.

ஒரு மனிதனின் வாழ்வை வளமாக்குவது வாசிப்பு என்றால் அது மிகையாகாது. வாசிப்பு நாம் நமது உள்ளத்திற்கும் சிந்தனைக்கும் வழங்கப்படும் ஒரு வித பயிற்சியே ஆகும்.

ஆயகலைகள் போன்று வாசிப்பும் ஒரு கலை தான். இக்கலையை பல்வேறுப்பட்ட அறிஞர்கள் பலவிதமாக வகுத்துக்கூறியுள்ளளனர். அந்த வகையில் 1972 ஆம் ஆண்டு தோமஸ் மற்றும் றொபின்ஷன் ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்ட SQ3R என்ற முறையானது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும். இதன் மூலம் ஒரு புத்தகத்தை வெற்றிகரமாக வாசித்து முடிப்பதற்கு ஐந்து படிமுறைகளை பின்பற்ற வேண்டும் எனக் கூறப்பட்டது. அவை பின்வருமாறு,

- SURVEY (தேடிப்பார்த்தல்), - QUATION (கேள்வி எழுப்புதல்), - READ (வாசித்தல்)
- RETRIVE (மீளவும் பார்த்தல்), - REVIEW (விமர்சித்தல்)

வாசிப்பு மாணவர்களின் கற்றலோடு எவ்வாறு தொடர்புறுகின்றது என்று பேராசிரியர் சபா.ஜெயராஜா நூலொன்றில் தன் கருத்துக்களை பின்வருமாறு பதிவிட்டிருந்தார். வாசிப்பு கற்பித்தலில் அனைத்தையும் உள்ளடக்கிய செயல்முறையை பயன்படுத்துதலால் கூடிய பயன்விளைவுகள் எட்டப்படும். அதாவது வாசிப்போடு இணைந்த காண்பியங்கள், கலந்துரையாடல்கள், தூண்டுதலளிக்கும் போட்டிகள், எழுத்துப்பயிற்சிகள், ஒழுங்கமைந்த திறன் விருத்திகள் போன்றவைகள் ஒன்றிணைக்கப்படல் வேண்டும் என்றார்.

வாசிப்பு பல முக்கிய திறன்களை தன்னகத்தே கொண்டதாகும்.அதாவது சிந்தனை செய்தல், கண்டறிதல், கற்பனை வளம், விவாதப்பாங்கு, நியாயம் கூறுதல், ஆராய்தல் போன்றவையாகும். அதே போல வாசிப்பு பல நோக்கங்களையும் கொண்டுள்ளது. அவை சந்தோசம், பொழுதுபோக்கு, ஓய்வுக்காக வாசித்தல், தகவல் சேகரிப்பு, தகவல் ஒழுங்கமைப்பு, தகவல் வெளியீடு மற்றும் அறிவு விருத்தி போன்ற பிரதான நோக்கங்களுக்காக வாசிப்பு மிக இன்றியமையாததாக காணப்படுகின்றது.



சிறுவர்களின் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துவற்கு வீடுகளில் சில வழிகளை கடைப்பிடிப்பதன் மூலம் அதனை நிறைவேற்ற கூடிய சந்தர்ப்பம் அதிகம் உண்டு. அதாவது பாடசாலை ஆசிரியர்கள் வாசிக்க வேண்டும் என்று கூறுகின்ற பகுதிகளை பெற்றோர்கள் வாசிப்பதற்கு பிள்ளைகளுக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும். வீட்டில் அவர்களுக்கு தேவையான ஆலோசனை பயிற்சிகளை கொடுத்தல், தனது பிள்ளைகளுக்கு புத்தங்களை பரிசுப்பொருட்களாக பெற்றுக்கொடுத்து உற்சாகமூட்டுதல், பல்வேறு வாசிப்பு சாதனங்களை பயன்படுத்த பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் வழங்குதல். நூலகத்தின் பெறுமதியை பிள்ளைகளுக்கு தினமும் உணர்த்தி அவர்களை நூலகதத்திற்கும் சென்று வாசிக்க வழிசமைக்க வேண்டும். சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றை பெற்றுக்கொடுக்க வேண்டும். வர்ணமயமான புத்தகங்கள் பெற்றுக்கொடுக்கும் போது அவற்றின் அழகுகள் கூட பிள்ளைகளின் மனதை மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு.

வாசிப்பின் நன்மைகள் எனும் பொழுது அதனால் ஏற்படும் அனுகூலங்ககளை வரையறுத்துக் கூறிவிட முடியாது. அதன் நன்மை அளப்பரியது. இருப்பினும் சில நன்மைகளை குறிப்பிடலாம்.

மன தூண்டுதுல் (Mentol Stimulation): அதாவது வாசிப்பு பழக்கமானது மூளையை சுறுசுறுப்பாகவும், செயல்திறன் மிக்கதாகவும் வைத்திருப்தோடு அறிவாற்றல் இழப்பினை குறைக்கின்றது.

அழுத்தக் குறைப்பு (Stress Reduction): அதாவது ஒருவருக்கு அவனது வாழ்க்கையில் பல இன்னல்கள் அழுத்தங்கள் கட்டாயமாக இருக்கும். இதனால் மன அமைதின்மை நிகழும். இந்த சந்தர்ப்பங்களில் ஒரு சுவாரஸ்யமான கதை புத்தகத்தையொன்ற வாசிக்கும் பொழுது அவை அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

அறிவு பெருக்கம் (Knowledge)ம் வாசிக்கும் ஒவ்வொரு விடயமும் எமது அறிவு வீச்சின் தன்மையை புத்துருவாக்கம் செய்வதோடு அறிவை விருத்தி செய்யவும் உதவுகின்றது.

சொல்விரிவாக்கம் (Vocabulary Expention): அதாவது நாங்கள் எவ்வளவு அதிகமாக வாசிக்கின்றோமோ அதே அளவு புதிய சொற்களை நாம் தெரிந்துகொள்கின்றோம். இது எம்மை அறியாமலே சொல் சார்ந்த வளத்தை பெற்றுத்தரும். சிறந்த பேச்சு வாண்மை எம்மைத் தேடி வரும். தெளிவாகமும், விரிவாகவும். தன்னம்பிக்கையுடனும் பேசலாம்.

நினைவு மேம்பாடு (Memory Improvement): நினைவு மேம்பாடு என்கிற பொழுது வாசிப்பின் மூலம் இது எமது மூளையில் ஏற்படுகின்றது.அதாவது ஞாபக சக்தி அதிகரிக்கிறது. ஆர்வத்துடன் கிரகித்துக் கொள்ள உதவுகின்றது,

வலுவான பகுப்பாய்வு சிந்தனை (Stronger Analytical Thinking): வாசிப்பு ஒருவருக்கு துப்பறியும் திறனை வளர்க்கின்றது. அதாவது எதிர்கால சிந்தனை, ஊகித்து அறியக்கூடிய ஆற்றல், விமர்சிக்கும் தன்மை என்பவற்றை வளர்க்கின்றது.

சிறந்த எழுத்துத் திறன்:

வாசிப்பு ஒருவருக்கு சிறந்த எழுத்துத்திறனை உருவாக்குவதோடு சிறந்த படைப்புக்களை புதிய முறையில் வெளியிடவும் துணை புரியும்.

அமைதி (Tranquality): ஒரு நல்ல புத்தகத்தை படிப்பதால் உங்கள் மன இறுக்கங்களை போக்குவதோடு மகத்தான உள் அமைதியையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

***ஜயகுமார் க்ஷான், மொனறாகலை***


கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜு

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜு இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கைகால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்!
நலமுடன் வாழுங்கள்!

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189


# வட அரைக் கோளத்தில் புவியின் காலங்களும் பருவங்களும்

நக்கீரன் -கனடா

எதிர்வரும் யூன் 20 ஆம் நாள் (சனிக்கிழமை) பிற்பகல் 5.43 மணிக்கு வேனில் காலம் முடிந்து கோடைகாலம் தொடங்குகிறது. அந்த நாளை ஆங்கிலத்தில் solstice என வானியலாளர்கள் அழைக்கிறார்கள். Sol என்ற சொல் சூரியனைக் குறிக்கும். Stice என்றால் "அசையாது நிற்கிறது" என்று பொருள். இந்தச் சொல் லத்தின் மொழிச் சொல். இலத்தீன் மொழியில் இருந்து ஆங்கில மொழிக்குள் புகுத்தப்பட்டது. சமற்கிருதத்தில் சங்கிராந்தி என அழைக்கிறார்கள். சூரியன் ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்கு நகர்வதே சங்கராந்தி என அழைக்கப்படுகிறது. தமிழில் கதிர்த்திருப்பம் என அழைக்கப்படுகிறது.

யூன் 20 ஆம் நாள் மிக நீண்ட பகலையும் குறுகிய இரவையும் கொண்டிருக்கும். கனடாவில் சூரியன் காலை 5.48 உதயமாகி மாலை 9.40 வரை நீடித்து இருக்கும். அதாவது 15 மணி, 52 நிமிடம், 5 வினாடி நீடித்திருக்கும். பின்னர் பகல்பொழுது குறைந்து கொண்டு போகும். அதே நேரம் தென் அரைக் கோளத்தில் மிக நீண்ட இரவும் குறுகிய பகலும் காணப்படும்.

சங்கிராந்தி அல்லது கதிர்த்திருப்பம் என்றால் என்ன? நமது பூமி ஒவ்வொரு நாளும் ஒரு முறை அதன் அச்சில் இடஞ்சுழியாக (மேற்கில் இருந்து கிழக்காக) சுழன்று கொண்டிருக்கிறது. இதனால் பகல் மற்றும் இரவு தோன்றி மறைகிறது. பூமி தன்னைத்தானே விநாடிக்கு 30 கிமீ (மணிக்கு 108,000 கிமீ) வேகத்தில் சுழல்கிறது, இது பூமியின் விட்டத்தை (ஏறத்தாழ 12,600 கி.மீ.) ஏழு நிமிடங்களிலும், சந்திரனுக்குச் செல்லும் தூரத்தை (384,000 கி.மீ.) நான்கு மணி நேரத்திலும் கடக்க எடுக்கும் வேகமாகும்.




நில நடுக்கோடு (பூமத்தியரேகை, Equator) என்பது நில உருண்டை (புவி) சுழலும் அச்சின் வட முனை, தென் முனை ஆகியவற்றுக்குச் சம அளவான தொலை-வில் நில உருண்டையைச் சுற்றி இருப்பதாகக் கருதப்படுகின்ற ஒரு கற்பனைக் கோடு ஆகும். இது நிலநடுக்கோடு என்றும் சில வேளைகளில் வெறுமனே மத்திய கோடு என்றும் அழைக்கப்படுவதுண்டு. நிலநடுக்கோடு புவி உருண்டையை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றது. இக்கோட்டுக்கு வடக்கேயுள்ள பகுதி வட அரைக்கோளம் என்றும் தெற்கேயுள்ள பகுதி தென் அரைக்கோளம் என்றும் அழைக்கப்படுகின்றது. நிலநடுக்கோட்டின் நிலநேர்க் கோட்டு அளவு 0° வடக்கு ஆகும். இக்கோட்டின் மொத்த நீளம் ஏறத்தாழ 40,075 கிமீ (24,901.5 மைல்கள்) ஆகும்.

புவி தனது அச்சில் தன்னைத்தானே இடஞ்சுழியாக சுற்றும் அதே நேரத்தில், புவி ஒரு வருட காலப்பகுதியில் சூரியனைச் சுற்றி அதன் சுற்றுப்பாதையில் (ecliptic) நகர்கிறது. இருப்பினும், பூமியின் சுழற்சியின் அச்சு சூரியனைச் சுற்றியுள்ள இயக்க அச்சுடன் வரிசையாக இல்லை. அதற்குப் பதிலாக புவியின் அச்சு அதன் சுற்றுப் பாதைக்கு 23.44 பாகை சற்றுச் சாய்ந்துள்ளது.

பூமி 23.5 பாகை சாய்ந்து இருக்க முக்கியமான காரணம் அதன் வடக்கு (மேல்) பகுதியில் நிலப்பரப்பு நிறை தென் பகுதியைவிட வேறுபடுவதால் தான் எனச் சொல்லப்படுகிறது. இது ஆங்கிலத்தில் Obliquity (சரிவு) என்று அழைக்கப்படுகிறது. புவி தனது அச்சில் 23.44 பாகை சாய்ந்திருப்பதாலேயே பருவ காலங்கள் ஏற்படுகின்றன. புவியின் அச்சுச் சாயாமல் நிமிர்ந்து (90 பாகை) இருந்திருந்தால் பருவ காலங்கள் ஏற்படாது.

புவி மட்டுமன்று சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்து கோள்களுமே தமது அச்சில் குறிப்பிட்ட அளவு சாய்ந்து உள்ளன.

இந்த சாய்வு என்பது ஆண்டின் ஒரு பாதியில் பூமியின் வடக்குப் பகுதி சூரியனை நோக்கி சற்று சாய்ந்து கிடக்கிறது. ஆண்டின் மற்ற பாதியில் தலைகீழாக சூரியனை நோக்காது வடக்கே சாய்ந்து கிடக்கிறது. வடக்கு அரைக்கோளம் சூரியனை நோக்கி சாய்ந்திருக்கும் தருணத்தில், வடக்கு அரைக்கோளம் அதன் கோடைகாலத்தை அனுபவிக்கிறது. அதே நேரத்தில் தெற்கு அரைக்கோளம் குளிர்காலத்தை அனுபவிக்கிறது.

புவி தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருக்கும் போது அது ஒரு நீள் வட்டப் பாதையில் (ecliptic) சூரியனைச் சுற்றிவருகிறது. ஆனால் எமது கண்களுக்கு புவியை சூரியன் சுற்றி வருகிறது போலத் தெரிகிறது. இது காட்சிப் பிழையாகும் (visual error) ஆகும். கண்ணால் பார்ப்பதுவும் முழு உண்மையாக இருக்காது என்பதற்கு புவி - சூரியனின் சுழற்சிகளைக் கூட நாம் சான்றாக எடுத்துக்கொள்ளலாம்.

இந்தக் காட்சிப் பிழை காரணமாகவே மிக நீண்ட காலமாக - அரிஸ்தோட்டல் அவருக்குப் பின் தொலமி ஈறாக - வானியலாளர்கள், மதவாதிகள் புவி இந்த அண்டத்தின் (universe) மையத்தில் இருப்பதாகச் சொல்லி வந்தார்கள். சூரியன் அதனைச் சுற்றிவருவதாகச் சொன்னார்கள்!

அரிஸ்தோட்டல் – தொலமி இருவரது புவிமைய அண்டம் மேற்குலக சிந்தனையை 2,000 ஆண்டு காலம் ஆட்டிப்படைத்தன.

பதினாறாம் நூற்றாண்டில்தான் போலந்து நாட்டின் புகழ்பெற்ற வானியலாளர் நிக்கலஸ் கோபெர்னிக்கஸ் (கிபி1473-1543) ஒரு புதிய கோட்பாட்டை முன்மொழிந்தார். கோபெர்னிக்கஸ் ஒரு முழுநேர வானியலாளராக இருந்ததில்லை. அவர் கிறித்தவ தேவாலாயத்தில் குருவாக இருந்தவர்.

நிக்கலஸ் கோபெர்னிக்கஸ் "வானுலக உடலிகளின் சுற்றுக்கள்" (On the Revolutions of Heavenly Bodies) என்ற புகழ்பெற்ற நூல் அவரது ஓய்வு நேரத்தில் எழுதப்பட்டதாகும். அவர் "வானுலக உடலிகளின் சுற்றுக்கள்" (On the Revolutions of Heavenly Bodies) என்ற நூல் கோபெர்னிக்கஸ் மரணப் படுக்கையில் படுத்திருந்தபோதுதான் வெளியிடப்பட்டது. அவரது காலத்தில் புவிமையக் கோட்பாடு கத்தோலிக்க திருச்சபையின் கோட்பாடாக இருந்தது. அந்தக் கோட்பாட்டை மறுத்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். "வானுலக உடலிகளின் சுற்றுக்கள்" என்ற நூல் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் படிப்பித்துக் கொடுப்பது போப்பாண்டவரால் தடைசெய்யப்பட்டிருந்தது.

வானுலக உடலிகளின் சுற்றுக்கள் என்ற நூலில் புவி அல்ல, சூரியன், சூரிய மண்டலத்தின் மையப் பகுதியில் இருக்கிறது என்ற கோட்பாடு முன்மொழியப்பட்டது. அதன் அடிப்படையில் ஞாயிறை வரிசையாகச் சுற்றி வரும் கோள்களில் புவி மூன்றாவது இடத்தில் வைக்கப்பட்டது. இந்த மாற்றம் கோபெர்னிக்கன் புரட்சி (Copernican Revolution) எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது.

கோபெர்னிக்கன் ஞாயிறுமைய கோட்பாடு 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை அவரது சமகால வானியலாளர்களாலும் இயற்கை தத்துவவாதிகளாலும் பொருத்தமற்றது என எண்ணப்பட்டது.

அவரது கோட்பாடுக்கு ஆதரவு வழங்கியவர்களில் யோகான்ஸ் கெப்லர் (1571-1630) மற்றும் கலிலியோ கலிலி (1564-1642) முன்னணியில் இருந்தார்கள். இறுதியாக கோபெர்னிக்கன் கோட்பாட்டுக்கு அறிவியல் அடிப்படையில் வலிமை சேர்த்த பெருமை சேர் அய்சக் நியூட்டனது 'உலகளாவிய ஈர்ப்பு மூல அடிப்படைக் கோட்பாடு' (Theory of Universal Gravitation) ஆகும்.

புதிய ஒழுங்கின்படி புவி இன்னொரு கோள், நிலா, ஞாயிறை அல்ல புவியைச் சுற்றி வருகிற உபகோள், வெகு தொலைவில் உள்ள விண்மீன்கள் ஞாயிறைச் சுற்றுவதில்லை, புவி தன்னைத்தானே 24 மணித்தியாலத்துக்கு ஒருமுறை வலம் இருந்து இடமாக (மேற்கு – கிழக்காக) சுற்றுகிறது, அப்படிச் சுற்றும் போது வானத்தில் உள்ள விண்மீன்கள் புவியை எதிர்த்திசையில் (கிழக்கு – மேற்காக) சுற்றுவதுபோன்ற ஒரு மாயத் தோற்றத்தை (உணர்வுக் காட்சியை) உண்டாக்குகிறது என எண்பிக்கப்பட்டது.

வெப்ப மண்டலப் பகுதிக்கு அப்பால் (Beyond Tropics) ஒருபோதும் சூரியன் தலைக்கு மேல் செங்குத்தாக விழுவது இல்லை. அயன மண்டலத்திற்கு அப்பால் உள்ள இந்த பகுதிகளில் நான்கு பருவ காலங்கள் தோன்றுகின்றன. கோடை காலம், இலையுதிர் காலம், குளிர்காலம், வசந்த காலம் ஆகியவையே அந்த நான்கு பருவகாலங்கள் ஆகும். 107 Days of Summer Break at Caltech! - Caltech

பருவகால மாற்றத்தினால் மட்டுமே உயிர்ச் சுழற்சி நடைபெறுகிறது! எப்போதும் வெயில் அடித்தால் அல்லது எப்போதும் மழைபெய்தால் உணவுப் பொருட்களைக் கூட உற்பத்தி செய்ய முடியாது போய்விடும். ! அது போல எப்பொழுதும் பனிப்பொழிவு உள்ள நாடுகளில் உயிரினம் வாழ்வது அரிதாக இருக்கும்.

பருவகால மாற்றங்கள் மற்றும் கால நிலை மாற்றத்தினால் உயிர் வாழ்வதற்கான சமநிலை புவியில் உள்ளது! இல்லாவிட்டால் புவியும் ஒரு உயிர்வாழ தகுதியற்ற கோளாக மட்டுமே இருந்திருக்கும்!

சூரியன் புவியைச் சுற்றிவரும் போது அதன் பாதை ஆறு மாதங்கள் வட அரைக் கோளத்திலும் அடுத்த ஆறுமாதம் தென் அரைக்கோளத்திலும் காணப்படுகிறது. வட திசைப் பயணத்தை உத்தராயணம் என்றும் தென்திசைப் பயணத்தை தட்சிணாயனம் என்றும் கூறுவர்.

சூரியன் யூன் 21 இல் தனது வட திசைப் பயணத்தை கடகக் கோட்டில் முடித்துக் கொண்டு தென்திசை நோக்கிப் பயணிக்கிறது. ஆறு மாதங்கள் கழித்து சூரியன் தன் தென்திசை பயணத்தை மகரக் கோட்டில் (இராசி) இருந்து தொடங்குகிறது. சூரியன் இராசி மண்டலத்தில் மகர இராசிக்கு பிரவேசிக்கும் நாளே மகர கதிர்த்திருப்பம் ஆகும். இதனைக் குளிர்கால கதிர்த்திருப்பம் (Winter Solstice) என அழைக்கிறார்கள். இது டிசெம்பர் 21-22 இல் தொடங்கி மார்ச் 20-21 வரை நீடிக்கிறது. வட அரைக் கோளத்தில் டிசெம்பர் 21-22 சிறிய பகல்பொழுதையும் நீண்ட இரவையும் கொண்டிருக்கும்.

இந்த வெப்ப கால, குளிர் கால கதிர்த்திருப்பங்களுக்கு அப்பால் சூரியன் தனது பாதையில் வான் நடுக்கோட்டை (celestial equater) இரண்டுமுறை வெட்டுகிறது. வடதிசைப் பயணத்தில் மார்ச் 21-22 ஆம் திகதி இடம்பெறுகிறது. தென்திசைப் பயணத்தில் செப்தெம்பர் 21-22 இல் இடம்பெறுகிறது. இந்த நாட்களில் உலகம் முழுதும் பேரளவு 12 மணித்தியால பகலும் 12 மணித்தியால இரவும் காணப்படும்.

மார்ச் 21-22 இல் வட அரைக் கோணத்தில் வேனில் காலம் ( Spring Equinox) தொடங்குகிறது. செப்தெம்பர் 21-22 இல் இலையுதிர்கால காலம் (Autumn equinox) தொடங்குகிறது. எனவே வேனில், கோடை, இலையுதிர்காலம், பனிக்காலம் என பருவங்கள் அந்த வரிசையில் மாறி மாறி இடம்பெறுகின்றன.

ஏற்கனவே கூறியவாறு தென் அரைக் கோளத்தில் இந்தப் பருவங்கள் தலைகீழாக மாறிவரும். வட அரைக்கோளத்தில் வேனில், கோடை, இலையுதிர், பனிக் காலம் தென் அரைக் கோளத்தில் இலையுதிர், பனி, வேனில், கோடையாக மாறி வரும்.

வானியலாளர்கள் கடந்த 2000 ஆண்டுகளில் புவியானது தனது அச்சில், சுமார் 24 நாட்கள் முன்னோக்கிச் சென்றுவிட்டதாகக் கணித்திருக்கிறார்கள். இன்று யூன் 21/22 இல் தொடங்கும் கோடைகால உச்சம் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் யூலை 18/19 இலும் இன்று டிசம்பர் 21/22இல் நிகழும் பனி உச்சம், அந்த நாளில் சனவரி 17/18 இலும் இடம்பெற்றிருக்கும்! அதே போல் இன்று மார்ச்சு 21/ 22 இல் நிகழும் வேனில் சமநாள், சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் ஏப்பிரல் 16/17 இல் நிகழ்ந்திருக்கும்! அதேபோல், செப்டம்பர் 22/23இல் இன்று நிகழும் கூதிர் சமநாள் என்றோ ஒருநாள் அக்டோபர் 17/18இல் நிகழ்ந்திருக்கும்.

இந்த அயனாம்ச வேறுபாடுகள் 24,500 ஆண்டுகளுக்குப் பின்னர் தானாகவே தான் திருத்தப்பட்டுவிடும்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 901



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில்

### - மட்டக்களப்பு -

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரானா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளி
2. கைகளை அடிக்கடி கழுவுதல்
3. தேவையற்று வெளியே செல்லுதல்
4. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருப்பது

இந்த நான்கு நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரானா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த நான்கு நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸூகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''
ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

கண்ணகி கோயில்களில் நடைபெறும் வருடாந்த சடங்கிற்காக வைகாசியில் கதவுதிக்கப்படுவதையே கதவு திறத்தல் என்னும் சடங்காகக் கொண்டாடுவர். ஞாயிற்றுக்கிழமை பகலில் நடைபெறும் இச்சடங்கில் மூலத்தானத்துள் வைக்கப்படும் 13 கும்பங்களையும், ஞாயிற்றுக்கிழமை இரவு கலியாணக்காலின் முன்பு வைக்கப்படும் 5 கும்பங்களையும் சிலம்புகளின்மீது வைத்து உருக்கொடுத்து, பின்பு உரிய இடங்களுக்கு எழுந்தருளப்பண்ணுவர். அப்பொழுது கட்டாடியார் உருவேறிய நிலையிலே காணப்படுவார். குளிர்த்தி ஆடுவதற்கு கண்ணகி அம்மனை அழகாக எழுந்தருளப்பண்ணுவர். வயது முதிர்ந்த கண்ணகை அம்மனாக கட்டாடியார் வேடந்தாங்கி, கண்ணகை அம்மனை மாராப்புச்சீலையுள் வைத்துக் கட்டிக்கொண்டு வருவார். கொம்புமுறி விளையாட்டு நடைபெற்ற பின்னர், செட்டிபாளையத்துக் கண்ணகை அம்மனை களுதாவளைக்கு எழுந்தருளப்பண்ணி, பள்ளியங்கட்டிலில் பொங்கி, குளிர்த்தி ஆடுவர். செட்டிபாளையத்திலிருந்து கட்டாடிமார் கண்ணகை அம்மனை எழுந்தருளப்பண்ணி வரும்போது தேவாதிகள் ஆடிவர, பூசாரிமார் காவியம்பாடி உடுக்கு அடித்துவர வழிநெடுகிலும் மங்கல விளக்கேற்றிப் பூரண கும்பம் வைத்து வழிபடுவது வழக்கம்.

குளிர்த்தி ஏடுபடித்தல் நிகழ்வும் மிகவும் பக்திபூர்வமாக நடைபெறும். மூலத்தானத்துள் வீற்றிருக்கும் கண்ணகி அம்மனை குளிர்த்தி மண்டபத்துள் எழுந்தருளச் செய்யும் நிகழ்வு பார்ப்போரைப் பக்திப் பரவசத்துக்குள்ளாக்கும். வருடத்தில் ஒரு முறை நடைபெறும் இச்சடங்கில், குளிர்த்திச் சடங்கினைச் செய்பவர்களே குளிர்த்தி ஏடு படிக்கின்ற பொறுப்பையும் ஏற்பர். செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் ஆண்டு உற்சவம் வைகாசிச் சடங்கு திருக்குளிர்த்தியுடன் நிறைவுபெறமாட்டாது. எட்டாம்நாள் திங்கட்கிழமை நடைபெறும் எட்டாம் சடங்குடனேயே சடங்கு நிறைவுபெறும்.

இவ்வாறு நடைபெறும் எட்டாம் சடங்கினை தெளிவு சடங்கு என அழைப்பர். திருக்குளிர்த்தி நிறைவு பெற்ற பின்னர், ஆலயத்திலே செய்ய வேண்டிய சகல வேலைகளையும் செய்து முடித்தபின்னர், மூலத்தானத்துள் இருக்கும் தூண்டாமணி விளக்கிற்கு நிறைய எண்ணெய் ஊற்றி, அம்மனை வழிபட்டு மூலத்தானத்துக் கதவைப் பூட்டுவர். இவ்வேளையில் கதவைப்பூட்டியவரும், அவர் உதவியாளரும் மட்டுமே அவ்விடத்திலே நிற்பர். ஏனையோர் அவ்விடத்திலிருந்து அகன்று சென்றுவிடுவர். விளக்கேற்றிய பின் எட்டுநாள்வரையும் எவரும் கோயில்பக்கம் செல்லமாட்டார்கள். எட்டாம் நாள் திங்கட்கிழமை மீண்டும் கதவு திறக்கப்படும். ஏற்றிவைத்த சுடர் விளக்கு எரிந்துகொண்டிருந்தால், உலகத்திற்கு நன்மை எனவும், தீபம் அணைந்திருந்தால் தீமை எனவும் நம்புவர். இச்சடங்கிலன்று நாகதம்பிரானுக்குப் பொங்கல் நடைபெறும்.

அத்தோடு அன்னதானமும் நடைபெறும். எட்டாம் சடங்கன்று செட்டிபாளையம் கண்ணகை அம்மன் கோவில் பூட்டப்பட்டு, மீண்டும் அடுத்த வருடமே மேற்கூறிய சடங்குகளோடு கோயில் கதவு திறக்கப்படும் என்னும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அண்மைக்காலத்தில் இப் பாரம்பரிய முறையிலே மாற்றம் ஏற்பட்டுள்ளது. சித்திரை புதுவருடப்பிறப்பு, கார்த்திகை விளக்கீடு, மற்றும் தைக்குளிர்த்தி போன்ற திருநாட்களில் கதவு திறக்கப்பட்டு இச்சடங்குகள் நடைபெறுவதான நடைமுறை மாற்றம் இக்கோயிலில் காணப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இவ்வாறான திரு நாட்களில், கோயில் மூலத்தானக்கதவு திறக்கப்படாமலே நடைபெற்று வந்துள்ளது. செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்திலே பல கும்பாபிஷேகங்களை சைவக்குருமார் முன்னின்று சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர். 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின்னர் தினப்பூசையும் இடம்பெற்றுள்ளது.

*வளரும்...*

SHANGARA DEVI ASTROLOGY & PSYCHIC CENTER
Master. GURU SWAMY





Most Powerful Spiritualist from India
We can Handle any Problem Are you depressed & Lonely?
உங்கள் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி
உங்கள் கை, முகம், நகம்,குறிப்புப் பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.
All Religions welcome. 100% Guaranteed Result
Remove Black Magic,Witchcraft, Obeya,Evil Spirits
Bad Luck &Jadoo & Give 100%,Life Long Protection
Open 7 days
10am -8pm

Name & Date of Birth - Horoscope
Hand Reading
Past, Present & Future
Overseas & Travel
Marriage, Family Matters
Husband -Wife Problems - Divorce
Children Education
Children Mistakes

Property, Court Problems
Face Reading
Love & Money Problems
Education & Work
sexual Problem
Jealousy & Black Magic
Health & Business
Evil affection

செய்வினை கோளாறா,
பேய் பிசாசு தொந்தரவா,
எதிரிகள் தொந்தரவா,
கண் திருஷ்டி, நாகதோசம்,
காதல் விவகாரங்கள்,
தொழில், மனை அபிவிருத்தி,
வாகனப் பொருத்தம்,
காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கு
தீர்வு காண அழையுங்கள்.

www.shankaraguruji.com
647-763-5262
1415 Kennedy Road Unit #7, Scarborough, M1P 2L6
New Quality Bakery (upstair) Near Royal Bank (Kennedy& Ellesmear)

# அன்பின் தொனி - 565

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

## ஜெபத்தின் வல்லமை ஜெபத்தின் வல்லமை

### தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்

பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். அவர் நாமத்தின் மகத்துவத் தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள். தேவனை நோக்கி: உமது கிரியை களில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர், உமது மகத்துவமான வல்லமையினி மித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்ச கம்பேசி அடங்குவார்கள். பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடு வார்கள், அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள், அவர் மனு புத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர். கடலை உலர்ந்த தரையாக மாற்றினார், ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள், அங்கே அவரில் களிகூர்ந்தோம். அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார், அவருடைய கண்கள் ஜாதிகள்மேல் நோக்கமாயிருக் கிறது, துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார் களாக. ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ்சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள். அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார். தேவனே, எங்களைச் சோதித்தீர், வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர்.
**- சங்கீதம் 66: 1-10**

### மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தா

எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர். மனு'ரை எங்கள் தலையின்மேல் ஏறிப்போகப்பண் ணினீர், தீயையும் தண்ணீரையும் கடந்துவந்தோம், செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர். சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன், என் இக்கட்டில் நான் என் உதடுகளைத் திறந்து, என் வாயினால் சொல்லிய என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன். ஆட்டுக்கடாக் களின் நிணப்புகையுடனே கொழுமையானவை களை உமக்குத் தகனபலியாக இடுவேன், காளைகளையும் செம்மறியாட்டுக் கடாக்களையும் உமக்குப் பலியிடுவேன். தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன். அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார். என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந் தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார். மெய் யாய் தேவன் எனக் குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.
**- சங்கீதம் 66: 11-20**

### தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக

தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய், தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப் பண்ணும். தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக, சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந் தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர், ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள். தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக, சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். தேவன் எங்களை ஆசீர்வதிப்பார், பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும். **- சங்கீதம் 67: 1-7**

### கர்த்தருடைய வேதம் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது


வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கி றது. பகலுக்குப் பகல் வார்த்தை களைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்கு பேச்சு மில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவது மில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசன ங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது, அவைக-ளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப் படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றியோடுகிறது, அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்து மாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய கற்பனை துாய் மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிற துமாயிருக்கிறது, கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப் படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனி லும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன், அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும், அப்பொ ழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக. **- சங்கீதம் 19: 1-14**

**அன்பான சகோதர, சகோதரிகளே! இன்றய கால கட்டதிதில் உலகில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது, பரிசுத்த வேதாகமத்திலிருந்து மேலே கொடுக்கப்பட்ட வார்த்தைகள் உங்களை ஆறுதல் படுத்தவும், திடப்படுத்தவும் உதவியாய் இருக்குமென அடியேன் நம்புகிறேன். ஆண்டவராகிய இயேசுதாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.**

*தொடரும்...*




# முள்ளில்லா "ரோஜா" ஆனந் மறைந்தார்



கனடாவில், கலை இலக்கிய மாத இதழான "ரோஜா"வின் ஆசிரியரும், "கீதவாணி" வானொலியில் அறிவிப்பாளர் மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் அறிமுகமாகி தொடர்ந்து "அலையோசை" இரவு நேர வானொலியில் முக்கிய பங்காற்றியவரும் ஆயிரக்கணக்கான காற்றலை இரசிகர்களின் வசீகரக் குரல் நாயகனாக வலம் வந்தவரும், தமிழ்த் தேசியத்தின் பரப்புரைக் குரலாக சங்கநாதம் செய்வருமாகிய திருமலை மைந்தன் லவானந் விஜயரட்ணம் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியவன் என்ற நட்புரிமையில் அன்னாரின் மறைவு குறித்து என் நினைவில் பதிந்த தகவல்கள் சிலவற்றை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அத்துடன் அது என் கடமைகளில் ஒன்று என்பதையும் உணர்கின்றேன்.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன் கனடாவில் வெளிவந்த "சூரியன்" வார இதழை வாசிக்கத் தொடங்கிய வேளையில் எனக்கு அறிமுகமான இளைஞர் தான் விஜய் ஆனந் அவர்கள். எனக்கும் எழுத வரும் என்பதை "சூரியன்" வார இதழ் ஊடாக அறிந்ததும், என்னோடு தொடர்பு கொண்டு தனது "ரோஜா" இதழுக்கும் எழுதுமாறு கேட்டுக்கொண்டார். "ரோஜா" இதழின் நிறுவன ஆசிரியராக அவர் விளங்கியதால், "ரோஜா ஆனந்" என்றும் நாளடைவில் அறிமுகமானார்.

அக்காலத்தில், மின் கணணி வாயிலாக தமிழ் எழுத்துக்களை வடிவமைத்து எழுதுவதிலும் தட்டச்சு செய்வதிலும் விளம்பரங்கள் மற்றும் பக்கங்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவராகவும் "ரோஜா ஆனந்" விளங்கினார்.

தொடர்ந்து நான் மொன்றியாலிலிருந்து நான் வெளியிட்ட "தென்றல்" வார இதழின் அனைத்து பக்க வடிவமைப்பு மற்றும் அச்சிடுதல் ஆகிய பணிகளை இவர் அற்புதமாக ஆற்றினார்.

அந்தப் பணிகளுக்காக அவருக்கு சன்மானம் வழங்கப்பட்டது. ஆனாலும், எனக்கு "பலகாரம்" தேவையாக இருந்ததனால், அவரிடமிருந்த சில "பலவீனங்களை" நான் பொறுமையுடன் சகித்துக் கொள்ளவேண்டியிருந்தது.

ஆனந், அடிக்கடி நித்திரை கொள்ளப் போய்விடுவார். அவர் எப்போது தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வாரோ, அப்போது தான் அவரது விரல்கள் கணணியில் விளையாட, ஆனந் வித்துவங்களைக் காட்டுவார்.

எனக்கு "வித்தைகள்" தெரியாத காரணத்தால், சீக்கிரமே, "தென்றல்" புயலாக மாறாமல் ஓய்ந்து விட்டது.

இது எனக்கு ஒரு கசப்பான அனுபவம். ஒரு ஊடகத்துறைப் பிரமுகர் எந்நேரம் தொலைபேசியில் அழைத்தாலும் ஆனந் அவர்கள் கண் துஞ்சாது பசி நோக்காது, அவரது பாசறைக்கு விரைந்து பயணிப்பார். "அண்ணை! இதோ வந்து கொண்டிருக்கின்றேன்" என்பார் ஆனந். ஆனந் வெளியே செல்ல, எனது பத்திரிகை வேலைகள் படுத்துவிடும்.

ஆனந் அவர்கள் ரொரென்ரோவிலிருந்து, மொன்றியாலுக்கு இடம்பெயர்ந்து செல்ல, அந்த அண்ணையுடனான "விடுதல் அறியா விருப்பே" காரணம் என்று அவர் சில நண்பர்களுடன் பல சந்தர்ப்பங்களில் கவலையுடன் பகிர்ந்த கொண்டதை நான் செவிமடுத்துள்ளேன்.

கலை இலக்கியவாதிகள் மற்றும் கலைஞர்கள் மற்றும் கலைத்துவமான தொழில் நுட்பங்கள் அறிந்தவர்களை வாழும் காலத்தில் அவர்களது மென்மையான உள்ளங்கள் புண்படாமல் இருக்கும் வகையில் நாம் எப்போதும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் கவனித்து செயற்படுவதே ஒரு பெரும் காரியமாகும்.

பாரதிக்கு பசி வந்தபோது, "வல்லமை தாராயோ இந்த மாநிலம் தழைப்பதற்கு" என்று பாடியது போன்று, ஆனந்த அவர்களும், பசியை மறந்து நமது தேசத்தின் விடுதலைக்காய் பரப்புரைகள் செய்து, இறுதியில் சிறு நீரகப் புற்று நோயால் வருந்தி இவ்வுலக வாழ்வை நீத்தது, துயரம் படிந்த ஒரு சம்பவம் ஆயிற்று.

அவரது சஞ்சிகையான "ரோஜா" இதழ் "மொன்றியால்" சிறப்பிதழாக வெளிவருவதற்கு முழு ஒத்துழைப்பையும் நான் வழங்கினேன்.

மொன்றியால் நகரத்தில் வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் கவிஞர்களின் திறமைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த நண்பர் ஆனந் எனது நன்றிக்குரியவர் ஆனார்.

ஆனந் அவர்கள் மிகச் சிறந்த வானொலிக் கலைஞராவார். எவரையும் எளிதில் வசீகரிக்கக் கூடிய குரல் வளம் கொண்டவர். "அலையோசை" என்னும் இரவின் மடியில் ஒலிபரப்பாகிய இவரது வானொலிச் சேவையில் என்னால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்ற வானொலிக் கலைஞர் "தேமதுரம்" பரம்ஜீ முக்கியமானவர்.

தொடர்ந்து காற்றலைக் கலைஞர்களாகக் கைகொடுத்த அமரர் கே. எஸ். பாலச்சந்திரன், திரு. திருமதி பிலிப் சித்ரா, தம்பதி, ஆகிய கலைஞர்கள் மிக முக்கியமானவர்கள். நானும் சில சந்தர்ப்பங்களில் "இரவின் மடியில்" ஆனந் அவர்களுடன் இணைந்து தவழ்ந்திருக்கின்றேன்.

ஆனந் அவர்கள் "ரோஜா மலரே இராஜகுமாரி" என்று ரோஜாவின் மீது அளவு கடந்த பிரியமுடையவராவார். நான் குறிப்பிடுவது அவருடைய "ரோஜா" இலக்கிய இதழையே ஆகும்.

ஏனோ தெரியவில்லை? ஆனந் "ஒரு ரோஜாவின் போராட்டம்" எனும் பெயரில் மெல்லிசையுடன் கூடிய குறுந்தட்டு ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

பின்னாளில் அதே தலைப்பில், ஒரு வீடியோ திரைப்படத்தை தயாரிப்பதிலும் ஆனந் ஈடுபட்டிருந்தார். அதற்காக இடம்பெற்ற நடிக நடிகையர் தேர்விலும் ஒத்திகையிலும் நானும் அவருடன் கூடவே இருந்து பணியாற்றினேன்.

ஒரு "ரோஜா"வின் போராட்டம் போன்றே எங்கள் கலா நாயகன் ஆனந் அவர்களின் கலை இலக்கியப் பங்களிப்பும். நாட்டுப் பற்றும் ஒரு போராட்டமே என நிரூபித்தது போன்று அவரது வாழ்வும் அமைந்து விட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால் களத்தில் அவர் விழுப்புண் தாங்கிய ஒரு வீரனாகவே ஆனந் என் கண்களுக்கு காட்சியளிக்கின்றார்.

*அழியா நினைவுகளுடன்*

***வீணைமைந்தன் - மொன்றியால்***

# கொரோனா பரவலை வேப்ப மரங்கள் கட்டுப்படுத்துமா?



கடந்த டிசம்பரில் சீனாவில் தொடங்கி, இன்று உலகம் முழுவதையும் முடக்கிப்போட்டு இருக்கும் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க முடியாமல் எல்லா நாடுகளுமே திண்டாடி வருகின்றன. கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியில், இங்கிலாந்தில் நடைபெற்ற ஓர் ஆய்வில் "டெக்சாமெதாசோன்" என்ற ஸ்டீராய்டு மருந்து, கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க உதவும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். முன்பே இந்த ஆய்வு நடந்திருந்தால் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொரோனா மரணங்களைத் தடுத்திருக்க முடியும் என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதற்கு மத்தியில் சித்தா, ஆயுர்வேதம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவம் எந்த அளவில் கொரோனாவை தடுக்கிறது அல்லது கட்டுப்படுத்துகிறது என்பது பற்றியும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அந்த வகையில் வேம்புக்கு கொரோனாவை குறைக்கும் ஆற்றல் இருப்பதாக, மருத்துவர் ஒருவர் கூறியிருக்கிறார்.

திருநெல்வேலியைச்சேர்ந்த பொதுமருத்துவரான அவரது பெயர் சண்முகம்.

பெங்களூருவில் பாதிப்பு குறைவு.

இந்தியாவின் பெரிய நகரங்களான டெல்லி, மும்பை, சென்னை, ஆமதாபாத் ஆகியவை கொரோனாவால் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கும் போது, சுமார் ஒரு கோடி மக்கள் தொகை கொண்ட மற்றொரு பெரிய நகரமான பெங்களூரு, குறைவான பாதிப்புகளை கொண்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். பெங்களூருவில் ஜூன் 17 நிலவரப்படி, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 827 தான்.

அங்கு வேப்பமரங்கள் அதிகம். எனவே கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்கிறார், டாக்டர் சண்முகம்.

"வைரஸ்களை அழிக்கும் ஆற்றல் வேம்புக்கு உண்டு. அம்மை நோய்க்கு வேம்பு தான் மருந்தாக பயன்பட்டது. வேப்ப மரங்களை அதிகம் நடுவதன் மூலம் பொதுவாகவே எந்த வைரஸ் பரவலையும் கட்டுப்படுத்தலாம். இப்போது கூட நகரங்களை விட கிராமங்களில் வைரஸ் தொற்று குறைவாக இருப்பதற்கு, குறைவான மக்கள் அடர்த்தியுடன் அதிக அளவிலான வேப்பமரங்களும் ஒரு காரணம்" என்று டாக்டர் சண்முகம் குறிப்பிட்டார். "வேப்பமரங்கள் பூத்துக்குலுங்கும் போது வெளியாகும் வாசனையில் காற்றில் மிதக்கும் வைரஸ்கள் செயல்இழக்கும்" என்றும் அவர் சொன்னார்.

காசநோய் போக்கும் வேப்பங்காற்று.

முற்காலத்தில் "டியூபர்குளோசிஸ்" என அழைக்கப்பட்ட காசநோயும் உயிர்களை காவு வாங்கி வந்தது. பின்பு அதைக் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

தற்போது சென்னையை அடுத்துள்ள தாம்பரத்தில், நாட்டப்பட்ட காசநோயாளிகளை குணப்படுத்த "தாம்பரம் டிபி சானடோரியம்" மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனை வளாகத்தில் வளர்ந்து நிற்கும் எண்ணற்ற வேப்பமரங்கள் நிழலோடு சுகாதாரமான காற்றையும் தருகின்றன. அதை சுவாசிக்கும் காசநோயாளிகள் விரைந்து குணம் அடைகின்றனர்.

காசநோயாளிகளை குணப்படுத்துவதில் வேப்பங்காற்றுக்கும் ஒரு பங்கு உண்டு என்பதாலேயே இதுபோன்ற சூழலுக்கு மத்தியில் மருத்துவமனை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

*மணிராஜ்,*
*திருநெல்வேலி.*


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

பயணத் தொடர் - பகுதி-32

# பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்

(முனைவர் வே, சங்கரநாராயணன், சேலம், தமிழ்நாடு)



31 மாதங்களாக நீடித்த தொடரை நிறைவு செய்து விடைபெறும் வேளை இது. எழுத்து என்பது ஒரு தவம். மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். மற்றவற்றை மறக்க வேண்டும். நிறைய சிந்திக்க வேண்டும். சிந்தித்தவைகளை செதுக்க வேண்டும். வார்த்தைகளை வண்ணப் படுத்த வேண்டும். வரிசைப் படுத்த வேண்டும். உண்மைகளையே பதிய வேண்டும். பதிவிற்கு முன்னால் அவைகள் உண்மைகள் தானா என உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். பல எழுத்தாளர்கள் ஆரம்ப கட்டத்தில் இதையெல்லாம் செய்கிறார்கள். வளர்ந்த பிறகு ஒரு உதவியாளர் குழுவை வைத்துக் கொள்கிறார்கள். உதவியாளர்கள் உருவாக்கித் தருபவற்றிற்கு தங்கள் பெயரை சூட்டிக் கொள்கிறார்கள். அதனால்தான் அவர்களின் ஆரம்ப கால படைப்புகளுக்கும், அண்மைப் படைப்புகளுக்கும் அதிக வேறுபாடுகளைக் காண முடிகிறது. எனக்குத் தெரிந்த ஒரு பிரபலக் கவிஞர். அவர் எழுதுவதை நிறுத்தி ஏழு ஆண்டுகள் ஆகிறது. ஆனால் ஏழு பேர் எழுதித் தந்து அவர் பெயரிலே கவிதை நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன. புனைப் பெயரில் ஒரு புகழ் பெற்ற பெண்ணிய எழுத்தாளர் மாதம் ஒரு நாவல் வெளிட்டு வந்தார். தமிழ் நாட்டின் ஒரு புகழ் பெற்ற நிறுவனம் அதை வெளியிட்டு வந்தது. அண்மையில் கூட ஒரு நாவல் வந்தது. வேடிக்கை என்னவென்றால் அந்த நாவலாசிரியர் இறந்து நான்கு ஆண்டுகள் ஆகிறது என்பது அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்ட என்போன்ற சிலருக்கு மட்டுமே தெரியும். எழுதுவது கடினம். அதுவும் தொடர்ந்து எழுதுவது கடினம். மணிக்கணக்காக என்னால் பேச முடியும். ஆனால் சில மணித்துளிகள் அமர்ந்து என்னால் எழுத முடியாது. நான் ஒரு எழுத்துச் சோம்பேறி. நான் ஏற்கனவே நூல்கள் வெளியிட்டிருக்கிறேன். ஆனால் அவை ஒவ்வொன்றும் பிரசவிக்க ஆண்டுகள் பல ஆகியிருக்கின்றன. ஆனால் பத்திரிகைத் தொடருக்கு கால அவகாசம் எடுத்துக் கொள்ள முடியாது. வாரந்தோறும் வியாழக்கிழமை அனுப்பியே ஆக வேண்டும். அனுப்ப ஒரு சில மணி நேரங்கள் தாமதமானால் கூட நண்பர் லோகேந்திரலிங்கத்திடமிருந்து அழைப்பு வந்து விடும். இந்த 31 வாரங்கள் இடைவெளியின்றி கட்டுரைகள் வெளி வந்ததற்கு அவரது தூண்டுதலே முழுக் காரணம்.

நான் எழுதினேன். தொடர்ந்து எழுதினேன். என் மூத்த சகோதரர் திடீர் மரணம் எய்தி சொந்த ஊரிலே இறுதிக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், "இந்த வாரம் விட்டு அடுத்த வாரம் எழுதிக் கொள்ளலாமே" என நண்பர் லோகேந்திரலிங்கம் சொன்ன பொழுது கூட, வேண்டாம் என மறுத்து அந்த வாரக் கட்டுரையையும் குறித்த நேரத்தில் அனுப்பி வைத்தேன். இலங்கைப் பயணத்தில், இணைய வசதி ஏதுமற்ற இடத்தில் மாட்டிக் கொண்ட பொழுது கூட அலைபேசி உதவியோடும், தமிழ் நாட்டில் உள்ள நண்பர் உதவி-யோடும் குறித்த நேரத்தில் கட்டுரையை எழுதி அனுப்பி வைத்தேன். சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்தை 20 ஆண்டு காலமாக ஆய்வு செய்து வருபவன் நான். அது தருகின்ற இரண்டு முக்கியமான செய்திகள் - குறிக்கோள் வாழ்க்கை, தொண்டு வாழ்க்கை. எந்த இடர் வந்தாலும் எடுத்த செயலை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற நெஞ்சத் துணிவை பெரியபுராணம் தான் எனக்குத் தந்தது. நண்பர் லோகேந்திரலிங்கம் அதற்கு தூண்டுகோலாக இருந்தார். 31 வார எழுத்துப் பணிக்கே நாம் இவ்வளவு கஷ்டப் படுகிறோமே, நண்பர் லோகேந்திரலிங்கம் 25 வருடங்களாகத் தானும் எழுதி, மற்றவர்களையும் எழுத வைத்து, உதயன் இதழை இடைவெளியின்றிக் கொண்டு வர எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியுமா?

அக்டோபர் 9ம் தேதி பனிப்பொழிவு சற்று அதிகமாக இருந்த அதிகாலை நேரம். எழுந்திருக்க மனமில்லை. இருப்பினும் அன்று இரவு 9.55 விமானத்தில் தாயகத்திற்குப் பயணப்பட வேண்டும். மாலை 6 மணிக்கே விமான நிலையத்தில் இருக்க வேண்டும். வெளிநாட்டுப் பயணங்களில் பெட்டி கட்டுவது தானே பெரும்பணி? அதிலும் கனடா தமிழ் சமூகம் அள்ளிக் கொடுத்த பரிசுப் பொருட்கள், புத்தகங்கள், ஷீல்டுகள், சாக்லேட்டுகள், உணவுப் பொருட்கள் இவ்வளவையும் இரண்டு பெட்டிகளில் அடைப்பது எளிதான செயல் அல்லவே! க்'டப்பட்டு அந்தப் பெரும் பணியை முடித்து, காலை உணவை விடுதியிலேயே முடித்து விட்டு நண்பருக்காக காத்திருந்தேன். நண்பகல் விருந்து நண்பர் லோகேந்திரலிங்கம் இல்லத்தில் ஏற்பாடாகி இருந்தது. பகல் 12 மணியளவில் நண்பர் லோகேந்திரலிங்கமும், வீணை மைந்தரும் என்னை அழைத்துச் செல்ல வந்தார்கள். இல்லம் சென்றோம். அற்புதமான அறுசுவை உணவு வகைகளோடு அன்னையார் காத்திருந்தார். மீண்டும் பெரிய புராணமே நினைவுக்கு வருகிறது. பெரியபுராணம் பெண்களை "மனையறத்தின் வேர்கள்" என்று குறிப்பிடுகிறது. எவ்வளவு ஆழமான பொருள் இதிலே அடங்கியிருக்கிறது தெரியுமா? நண்பர் லோகேந்திரலிங்கம் தமிழ்ச் சமூகத்திற்கு நிழல் தரும் விருட்சமாக, கனிகள் தரும் சோலையாக, கிளைகளையும், விழுதுகளையும் பரப்பி விளங்குகிறார் என்றால், அந்த மனையறத்தின் வேராக இருந்து, தன்னை வெளிகாட்டிக் கொள்ளாமல், இன்று வரை தொண்டு தொடரும் தூய மனம் படைத்தவராக திருமதி. லோகேந்திரலிங்கம் திகழ்வதுதானே காரணம்?



அவரிடமும், மற்ற சுற்றத்தாருடனும் விடை பெற்றுக் கொண்டு மாலை 3:30 மணியளவில் விமான நிலையம் நோக்கி நானும் நண்பர் லோகேந்திரலிங்கமும் பயணமானோம். செல்லும் வழியிலும் சில அன்பளிப்புப் பொருட்களை எனக்கும், என் இல்லத்தார்களுக்கும் அவர் வாங்கிக் கொடுத்தார். 6 மணிக்கே பியர்சன் விமான நிலையம் சென்றடைந்தோம். பாதுகாப்புப் பரிசோதனைகளுக்காக உள்ளே நுழைய அரை மணி நேரம் இருந்தது. கனடாவில் நான் தங்கியிருந்த 14 நாட்களில் அதிகம் விரும்பிச் சுவைத்த "டிம் கார்டன்" காபியை நண்பர் வாங்கி கொடுத்தார். ஆனால் இப்போது ஏனோ அது சுவைக்கவில்லை. காரணம் எனக்குத் தெரியவில்லை. நண்பர் லோகேந்திரலிங்கம் பியர்சன் விமான நிலையத்திலிருந்து பிரியா விடை பெற்றுச் செல்கிறார். அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேறும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் சென்ற பிறகும், அவர் சென்ற திசையையே சில மணித் துளிகள் பார்த்துக் கொண்டு சிலையாக நின்றிருந்திருந்தேன். விழிகளின் கடையோரம் கண்ணீர்த் துளிகள் பனித் திவலைகள் போலப் படர்ந்திருந்தது. இதற்கும் எனக்குக் காரணம் தெரியவில்லை.

*(முற்றும்)*



# மரண அறிவித்தல்

பிறப்பு
15-04- 1947



இறப்பு
17-06-2020

## திரு கணேசமூர்த்தி ஆறுமுகம் (குகதாஸ்)

**இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் ஊழியர்**
**புங்குடுதீவு 2ம் வட்டாரம்(பிறந்த இடம்) நாரந்தனை பிரான்ஸ் சுவிஸ் கனடா**

யாழ். புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாரந்தனை, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், கனடாவை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி ஆறுமுகம் அவர்கள் 17-06-2020 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

பரமேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,

தனுஷா, அமலன், மேகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

சிறீரங்கன்(சிறி), அபிராமி(அபி), அருள்அழகன்(அருள்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

அஸ்வின், அயைய், அகில், அபினேஸ், அஜிசா, அரிஷன், வைசாலி, வைசிக்கா, வைஸ்னயா ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்றவர்களான நடேசமூர்த்தி, சிவஞானமூர்த்தி, இராஜேஸ்வரி, ஸ்ரீராமமூர்த்தி மற்றும் இலட்சுமணமூர்த்தி, காலஞ்சென்ற நாகநாதமூர்த்தி மற்றும் கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்றவர்களான புஷ்பலீலாவதி, சிவபாதசுந்தம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

அன்னலெட்சுமி, பூமணி, திருநாவுக்கரசு, மகேஸ்வரி, காலஞ்சென்ற ரதிதேவி, சோதீஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தனபாலன், சபாநாயகம் மற்றும் யோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்ற தவநாயகம், சரோஜினி, பரமேஸ்வரி, எமிலி, சிவகுமாரி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

### நிகழ்வுகள்

பார்வைக்கு: Saturday, June 20th 2020 from 5:00 PM to 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre - 8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1
தகனம்: Sunday, June 21st 2020 from 10:30 AM to 11:00 AM
Highland Hills Crematorium - 12492 Woodbine Avenue, Gormley, ON L0H 1G0

### தொடர்புகளுக்கு

அமலன் - மகன்: 416-829-9993 மேகலா - மகள்: 647-961-8338
தனுஷா - மகள்: 905-201-1860

www.uthayannews.ca

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On 12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
(BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
உதயன்
FRUITS HABY
பலசரக்கு மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1263 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 19, 2020

# கனடாவில் இந்தியர்களின் நலன்களைக் கவனிக்கும் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இந்தியப் பிரதமர் கனடியப் பிரதமரிடம் நன்றி தெரிவித்தார்




கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ அவர்களும் தொலைபேசி உரையாடல் ஒன்றை நடத்தினர். இதற்கான ஏற்பாடுகளை கனடாவில் உள்ள இந்தியத் தூதரகமும் இந்தியாவில் உள்ள கனடியத் தூதரகமும் செய்திருந்தன.

சுமார் அரை மணி இடம்பெற்ற இந்த தொலைபேசி உரையாடலில் முதலில் இரு நாடுகளின் தலைவர்களும் "கொரோனா" நோயினால் உலக நாடுகள் மற்றும் தங்கள் இரு நாடுகள் சந்தித்த சவால்கள் பற்றி உரையாடிய பின்னர் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புக்களினால் சுதாதார மற்றும் பொருளாதார சவால்களை எவ்வாறு சமாளிக்கலாம் என்று கலந்துரையாடினர். மேலும் இந்த உரையாடலின் போது கனடாவில் உள்ள இந்தியப் பிரஜைகளின் நலன்களைக் மிகவும் அக்கறையுடன் கவனிக்கும் பிரதமருக்கும், கனடிய அரசுக்கும் அதிகாரிகளுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.



# கோவிட்–19 காரணமாக வேலை செய்வதை நிறுத்தியுள்ள, தகுதிபெற்ற பணியாளர்களுக்கு மாதாந்தம் $2,000 வழங்கும் CERB திட்டம் நீடிக்கப்படுகின்றது

தற்போதைய சூழ்நிலையில், அதிக கனேடிய மக்கள் தங்கள் வேலைக்குத் திரும்பினாலும், கோவிட்-19 காரணமான சவால்களைப் பலர் தொடர்ந்தும் எதிர்கொள்கிறார்கள். எனவே பாதுகாப்பான முறையில் பொருளாதார செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்க நாம் நடவடிக்கை எடுக்கும் வேளையில், கனேடிய மக்கள் அனைவரதும் உடல்நலனையும், பொருளாதார நலனையும் பாதுகாப்பதற்குக் கனேடிய அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும். பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ, கனேடியர்கள் வேலைகளுக்குத் திரும்பும்போது தேவைப்படும் உதவி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காக கனடா அவசர நடவடிக்கைக் கொடுப்பனவை (Canada Emergency Response Benefit (CERB)) மேலும் எட்டு வாரங்களுக்கு அரசு நீடிக்குமென கடந்த செவ்வாய்கிழமை அறிவித்தார். தகுதியுள்ள பணியாளர்கள் இந்த நீடிப்புடன் மொத்தமாக 24 வாரங்கள் வரை உதவியைப் பெறக் கூடியதாக இருக்கும்.

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போ'து அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

கனடியப் பிரதமர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

சவாலான இந்த வேளையில் உணவைப் பெற்றுக் கொள்வதையும், செலவினங்களை மேற்கொள்வதையும் தொடர்ந்து செய்வதற்கு உதவியாக கோவிட்-19 காரணமாகப் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு உடனடியான ஆதரவை வழங்குவதற்காக CERB யைக் கனேடிய அரசு அறிமுகம் செய்தது. பொருளாதார செயற்பாடுகளை நாம் மீளவும் ஆரம்பித்து, மக்களை மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளும் வேளையில், இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் கனேடியர்கள், அவர்களால் இயலுமாகவும், நியாயமானதாகவும் இருந்தால் வேலைவாய்ப்புக்களை ஆர்வத்துடன் தேடவோ, வேலைக்குத் திரும்புவதற்குத் திட்டமிடவோ வேண்டும்.

இதற்காக, கொடுப்பனவைப் பெறும் கனேடியர்கள் வேலைவாய்ப்பைத் தேடுவதற்கும், வேலை தேடுவதற்கான உதவிகளைக் கொண்டுள்ள கனடாவின் தேசிய வேலைவாய்ப்புச் சேவையான Job Bank கைப் பயன்படுத்துவதற்கும் ஊக்கமளிக்கும் வகையில் CERB இற்கான சான்றுப்படுத்தலில் அரசு மாற்றங்களைச் செய்யவுள்ளது. எதிர்வரும் சில வார காலப்பகுதியில் சர்வதேசத்தில் உள்ள சிறந்த நடைமுறைகளையும், பொருளாதாரத்தையும், வைரஸின் வளர்ச்சியையும் அரசு கண்காணித்துத், தேவைப்படும் உதவியை அதிகமானவர்கள் பெற்றுக் கொள்வதற்கு உதவித் திட்டத்தில் மாற்றங்கள் எவையாவது தேவைப்பட்டால் இந்த மாற்றங்களை அரசு செய்யும்.

CERB, கோவிட்-19 காரணமாக வேலை செய்வதை நிறுத்தியுள்ள, அல்லது பணிபுரியும் நேரம் குறைக்கப்பட்டுள்ள தகுதி பெறும் பணியாளர்களுக்கு நான்கு வார காலப் பகுதிக்கு வரி அறவிடத்தக்க கொடுப்பனவாக 2,000 டொலரை வழங்கும் திட்டமாகும். பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்வோருக்கு CERB கிடைக்கும்:

☐ கனடாவில் வசிக்கும், ஆகக் குறைந்தது 15 வயதானவர்கள்

☐ கோவிட்-19 தொடர்புடைய காரணங்களால் வேலைசெய்வதை நிறுத்தியோர், அல்லது வேலைகாப்புறுதி அல்லது நோய்காலக் கொடுப்பனவு ஆகியவற்றுக்குத் தகுதிபெற்றோர், அல்லது 2019 டிசம்பர் 29 இற்கும், 2020 ஒக்ரோபர் 3 இற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர்களது வேலைக்காப்புறுதிக் கொடுப்பனவுகள் முடிவடைந்தோர்

☐ வேலைவாய்ப்பு அல்லது சுய தொழில் மூலம் 2019 ஆம் ஆண்டில், அல்லது விண்ணப்பத் திகதிக்கு முந்தைய 12 மாத காலப்பகுதியில் குறைந்தது 5,000 டொலரை வருமானமாகப் பெற்றுக் கொண்டோர்

☐ CERB கொடுப்பனவுக்கான தனித்தனியான காலப் பகுதிகளில் வேலைவாய்ப்பு, அல்லது சுயதொழில் என்பவற்றின் மூலம் $1,000 மேற்பட்ட வருமானத்தைப் பெறாதோர்

☐ சுய விருப்பத்தின் பேரில் வேலையைத் துறக்காதோர்




மே 15 ஆந் திகதி அறிவிக்கப்பட்ட கனடா அவசர சம்பள மானியத்தை (Canada Emergency Wage Subsidy (CEWS)) நீடிக்கும் திட்டம் போன்ற பல நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இன்றைய அறிவிப்பு அமைகிறது. கனடா அவசர சம்பள மானியம் 2020 ஓகஸ்ட் 29 வரை நீடிக்கப்படுகிறது. வேலைவாய்ப்புக்களைப் பாதுகாப்பதற்கும், வணிக நிறுவனங்கள் பணியாளர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கும், பணிக்குறைப்புச் செய்தவர்களை மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்வதற்கும் CEWS உதவியளிக்கும்.

பொருளாதார செயற்பாடுகள் பகுதிகளாக, பாதுகாப்பான முறையில் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும் நிலையிலும், பல கனேடியர்கள் கோவிட்-19 னின் விளைவுகளைத் தற்போதும் அனுபவிக்கிறார்கள். இந்த நெருக்கடி வேளையில் கனேடியர்களுக்கு விரைவான உதவியை வழங்கும் திட்டத்தின் பகுதிகளாக CERB, CEWS ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள கனேடியர்கள், தொடர்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வேலைக்குத் திரும்பும் காலம் வரை உதவியளிப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது.

**மேலதிக தகவல்களுக்கும், ஊடகங்களின் கேள்விகளுக்கும்:**
**டொறீன் சவுந்தரநாயகம்**
Gary.Anandasangaree.C1A@parl.gc.ca

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
Delivering Promises. Building Trust.
RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074